விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka


**கல்யாண மாலை**
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 222 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 12 ஞாயிற்றுக்கிழமை (28.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகின்றேன்
### ரணில் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு



(காலி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலி மாநகர சபை மைதானத்தில் நேற்று இடம்பெற்ற "ஒன்றாக 19

## இணக்கப்பாடின்றி முடிந்தது ரணில் - பசில் பேச்சுவார்த்தை
### ஜனாதிபதித் தேர்தலில் பெரமுன யாருக்கு ஆதரவு என நாளை அறிவிக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் இணக்கப்பாடின்றி முடிவடைந்ததாகப் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 19

# விடுதலைப் புலிகள் மீதான தடை மேலும் நீடிப்பு
## ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு



(பிரெஸ்லஸ்)-

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.**

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் நோக்கில் 2001/931/CFSP பொது நிலைப்பாட்டின்படி அமைக்கப்பட்ட நபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியலை ஐரோப்பிய ஒன்றியம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புதுப்பித்தது. 19

### அடுத்த சில மாதங்களில்
## வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடு தளர்வு

(கொழும்பு)

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அடுத்த சில மாதங்களில் தளர்த்தப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுகளில் அந்நியச் செலாவணி தட்டுப்பாடு காரணமாக, வாகனங்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டு, அத்தியா 19

### ஜனாதிபதித் தேர்தல்
## தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு விரைவில்
### சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை எனவும், கட்சி விரைவில் கூடி தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் 19

### சுமந்திரன் எம்.பியின்
## வாகனம் விபத்து

(கிளிநொச்சி)

இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பயணித்த வாகனம் கிளிநொச்சியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் 19

## தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்த விக்கிரமபாகு கருணாரட்ணவுக்கு யாழில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுக்காக குரல் கொடுத்த இடதுசாரி தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணவிற்கு யாழில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட தலைமை அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் பொன்மாஸ்டர் தலைமையில் நேற்று மாலை இந் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது விக்கிரமபாகு கருணாரட்ணவின் திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது. (ம-7)



### தேர்தல் நடவடிக்கைக்கு
## விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக, தேர்தல் விவகாரங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அசங்க கரவிடவுக்கு மேலதிகமாக மேலும் ஒரு பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஷ்ட 19

### ரணிலுக்கு ஆதரவு வழங்குங்கள்
## மகிந்தவைச் சந்தித்து ஆதரவு கோரிய சுசில், சாகல

(கொழும்பு)

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி அவரது இல்லத் 19

## தேர்தலில் ரணிலுக்கு ஆதரவு நாமல் - லொஹான் வாய்த்தர்க்கம்
### வாக்குவாதம் அடிதடி வரை சென்றதாகத் தகவல்

(கொழும்பு)

லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவிற்கும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவிற்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

கொழும்பில் உள்ள நாமல் ராஜபக்ஷவின் வீட்டிற்கு நேற்று முன் தினம் சென்றிருந்த லொஹான் ரத்வத்தவுடனான வாக்கு வாதம், அடிதடி வரை சென்று தடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் இருந்த வர்களின் தலையீட்டி 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

கொடிகாமம் மடத்தடி வீதியில் (A9 வீதியிலிருந்து 600m, பருத்தித்துறை வீதியிலிருந்து 500m) 3 பரப்பு 11.82 குளி காணியுடன் அறை 4, இணைந்த குளியலறை 1, வெளி மலசலகூடம், வாகனத்தரிப்பிடம், வெளிக்ஹாலுடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை) (1569)

**077 633 3683**
**071 813 6824**

## காணி விற்பனைக்கு

Rajeswary Homes PVT LTD
தெல்லிப்பளை நகரை அண்மித்த டச்சு வீதியில் 1½ பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட, சீரமைக்கப்பட்ட 20 அடிப்பாதையுடன் 9 காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.
(UDA,பிரதேசசபை அனுமதிபெறப்பட்டது.) (C-870)

தொடர்பு: **077 076 7114**

## காணி விற்பனைக்கு

நெல்லியடி கொடிகாமம் வீதியில் உள்ள குழந்தை யேசு முன்பள்ளி பாடசாலைக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (1570)

தொடர்புக்கு: **077 884 6159**

## பணியாளர் தேவை

☆ சமையல் உதவியாளர்
☆ உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
☆ துப்பரவுப் பணியாளர் (1565)

தொடர்புகளுக்கு: **075 068 3810**

## சன்மானம் ரூபா 50,000/=

டொக்டர் பொன்னம்பலம் சந்திரசேகரம் தேசிய அடையாள அட்டை 383390176V உடன் வாகன செலுத்துனர் லைசென்ஸ் கொண்ட பர்ஸ் 24.07.2024 முதல் காணாமல் போயுள்ளது. கண்டு எடுப்பவர்கள் தயவு செய்து டொக்டர் பொன்னம்பலம் சந்திரசேகரம் உரிமையாளரிடம் ஒப்படைத்தால் ரூபா 50,000 சன்மானம் வழங்கப்படும். (1559)

விலாசம் :
வண் - மேற்கு
VAN - WEST CLINIC AND NURSING HOME -60
ஐயனார் கோவில் வீதி - வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

இல. **021 222 1697** அல்லது
**077 993 5844** உடன்
தொடர்பு கொள்ளவும்

## வீடு விற்பனைக்கு

நல்லூர் கோவிலிலிருந்து 5 நிமிட நடை தூரத்தில் வீடு விற்பனைக்கு உண்டு. 5 அறை கொண்ட வீடு, வீட்டுத் தளபாடங்களுடன் விற்பனைக்கு உண்டு.
பார்வையிடும் நேரம் :- 10.30A.m - 5.30P.m Sunday (1561)

தொடர்புகளுக்கு: **077 796 3186**

## சண்முகா & சன்ஸ்

மொத்த சில்லறை வியாபாரம்
Shanmuga & Sons Whole Sales

- எரிவாயு சிலிண்டர்கள் இல்லங்கள் தோறும் சென்று விநியோகிக்கப்படும்.
- சீனி - 255/=
- எல்லாப் பொருட்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

வேலையாட்கள் தேவை (ஆண்,பெண் இருபாலாரும்)

- காசாளர்
- பொதி செய்பவர்
- வாகன ஓட்டுனர் (1567)

காளி கோயில் வீதி, சாவகச்சேரி. 074 121 3109

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## மரண அறிவித்தல்

பிறப்பு
1954 - 01 - 24



இறப்பு
2024 - 07 - 26

### மாரிமுத்து சரஸ்வதி

முருகன் கோவில் வீதி, நெல்லியடி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து சரஸ்வதி அவர்கள் 26.07.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அழகர்சாமி மாரிமுத்துவின் அன்பு மனைவியும் அழகேசன்(விமலன்)(அழகர் பல்பொருள் வாணிபம் பழைய சந்தை நெல்லியடி), கலைவாணி, சரவணன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தெய்வானையின் பாசமிகு மாமியாரும் தனுசியா, மனுஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.07.2024) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் :*
குடும்பத்தினர்
விமலன்: 077 5559333
(C-868)

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 - 11 - 1953



மறைவு
27 - 07 - 2024

### வைரமுத்து பேரம்பலம் (கண்ணன்)

வல்லியானந்தம் வீதி துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் முல்லை வீதி விஸ்வமடு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து பேரம்பலம் (கண்ணன்) அவர்கள் 2024.07.27 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மிருணாளினி மற்றும் ரமணாளினி, நிசாந்தன்(ஜனனி ஸ்ரோஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் றமேஸ்(இ.போ.ச) , ஜனனி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவதேவி, சக்திவேல்(கனடா), பஞ்சரத்தினம் ஆகியோரின் சகோதரனும் தீபிகா, அபிஷயா, அரிகித், ஆயுஸ், ஆருஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 2024.07.28 இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முல்லை வீதி, 12ம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முல்லை வீதி,
விஸ்வமடு கிழக்கு.
(C-875)
*தகவல் :* குடும்பத்தினர்
077 206 0339

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடையூறு இன்றி தேர்தலை நடத்த பலத்த பாதுகாப்பு

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

**நாட்டினது பாதுகாப்பை உறுதிப்படுத்தி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை எவ்வித இடையூறுமின்றி நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக் கோன் பாதுகாப்பு பிரதானிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**

பாராளுமன்றில் பாதுகாப்பு தொடர்பான அமைச்சரவை உப குழு நேற்று கூடிய போதே, அவர் இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார்.

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், அந்த நேரத்தில் ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் முழு நாட்டினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.


இதன்போது, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா மற்றும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.



நாட்டின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று முன்தினம் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 05 . 1957



மறைவு 24 . 07 . 2024

## திரு. செபமாலை மரியதாஸ் (அருள்நேசன்)

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்)

கூழாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செபமாலை மரியதாஸ் அவர்கள் 2024.07.24 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை ஆரோக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் லூர்த் ஜெயமலரின் (ரதி) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான யேசுரட்ணம் - மாக்கிறேட்டின் அன்பு மருமகனும், மேரிபிரான்சிஸ்காவின் (இலங்கை வங்கி - கடன் பிராந்தியம் யாழ்ப்பாணம்) பாசமிகு தந்தையும் ஜோன்சன் மரீன் (சட்டத்தரணி) மாமனாரும், மேரிமலர்-தோமஸ் பூபாலு, ராசமலர்-சூசைப்பிள்ளை, மரியமலர்- காலஞ்சென்றவரான அன்ரனி, மேரி திரேசாபெனடிக்ற், அன்னமேரி- லோகநாதன், காலஞ்சென்றவரான யேசுதாசன்- மேரி ஜொய்சி, சூசைதாஸ்- றெஜினா வண்ணமலர், சந்தானமேரி - சந்திரமோகன் ஆகியோரின் சகோதரனும் - மைத்துனரும் மற்றும் பிரான்சிஸ் குமார்- மேரிமெக்ரலின், உதயகுணசீலன்-ஆசா பறேக், றஞ்சித் ஜெயமலர்- மத்தியுஸ் ஆகியோரின் மைத்துனரும் - சகோதரரும், ஜோன் ஜெவ்றின், (யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஜோன் ஜெவ்றி (யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின்பாசமிகு பேரனும்ஆவார்.

அன்னாரின் புகழுடல் (29.07.2024) நாளை திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்திலிருந்து பிற்பகல் 2.30 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, காக்கைதீவு புனித அன்னாள் கத்தோலிக்க சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.32, கூழாவடி கிழக்கு,
ஆனைக்கோட்டை, மானிப்பாய். (சி-869)

தகவல் :
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எறிபந்தாட்ட போட்டி முடிவுகள்

## கனகராயன்குள மகாவித்தியாலயம்-2 சம்பியன்கள்

## கோட்டைகட்டிய குள மகா வித்தியாலயம்-1 சம்பியன்







வட மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டப் போட்டியில் ஆண்கள், பெண்களுக்கான போட்டி முடிவுகள்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான எறிபந்தாட்ட போட்டிகள் வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் 17 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலய அணி 1 ஆம் இடம், மன்னார் அடம்பன் மகா வித்தியாலய அணி 2 ஆம் இடம், நெல்லியடி மத்திய கல்லூரி அணி 3 ஆம் இடத்தையும், 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் கனகராயன்குளம் மகா வித்தி யாலய அணி 1 ஆம் இடம், மன்னார் அடம்பன் மகா வித்தியாலய அணி 2 ஆம் இடம், கோட்டை கட்டியகுளம் மகா வித்தி யாலய அணி 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

17 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி 1 ஆம் இடம், யாழ். இராமநாதன் கல்லூரி அணி 2 ஆம் இடம், மன்னார் அடம்பன் மகா வித்தியாலய 3 ஆம் இடத்தையும், 20 வயதிற்கு உட்பட்ட பிரிவில் மன்னார் அடம்பன் மகா வித்தியாலய அணி 1 ஆம் இடம், வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி 2 ஆம் இடம், யாழ்.இராமநாதன் கல்லூரி அணி 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-90)

## மகளிர் ஆசிய கோப்பை இறுதி ஆட்டம் இன்று

### இலங்கை-இந்தியா பலப் பரீட்சை

9 ஆவது பெண்கள் ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி (20 ஓவர்) இலங்கையில் நடந்து வருகிறது. லீக் சுற்று போட்டிகள் முடிந்த நிலையில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் ஆகிய அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

முதல் அரையிறுதியில் வங்காள தேசத்தை வீழ்த்திய இந்திய அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறி அசத்தியது.

இந்நிலையில், 2ஆவது அரையிறுதிப் போட்டியில் இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் இலங்கை அணி வெற்றி பெற்று மகளிர் ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் இறுதிப் போட்டிக்கு இலங்கை அணி முன்னேறியது.

இன்று நடைபெறும் மகளிர் ஆசிய கோப்பை இறுதிப் போட்டியில் இந்தியா இலங்கை அணிகள் மோதுகின்றன. (6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## தேசிய மட்ட குத்துச் சண்டை போட்டியில் வவு.இளைஞன் சாதனை




தேசிய மட்ட விளையாட்டு குத்துச் சண்டைப் போட்டியில் வடமாகாணத்தை பிரிநிதித்துவப் படுத்தி வவுனியா வடக்கு இளைஞன் தங்கப்பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார்.


48 ஆவது தேசிய மட்ட விளையாட்டு குத்துச் சண்டைப் போட்டி கொழும்பு றொறின்ரன் உள் எக விளையாட்டு அரங்கில் இடம் பெற்றது. போட்டியில் வட மாகா ணத்தை பிரதிநிதிப்படுத்தி வவுனியா நெடுங்கேணியை சேர்ந்த முத்தையா கிரிதரன் என்ற இளைஞன் 63.5 தொடக்கம் 67 கிலோ எடைப்பிரிவில் கலந்து கொண்டே குறித்த சாதனை யை நிகழ்த்தியுள்ளார்.

இதேவேளை வடமாகாண தலைமை பயிறுவிப்பாளர் மு.நிக்சன் ரூபராஜ் தலைமையிலான அணியினர் ஒரு தங்கம், 2 வெள்ளி 5 வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுக் கெண்டனர்.

இதில் குறித்த பயிற்றுவிப்பாளரின் பயிற் சியின் கீழான வவுனியா மாவட்ட குத்துச் சண்டை அணியினர் 1 தங்கம் மற்றும் 3 வெண்கலப்பதக்கத்தினை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கான பணத்தை வழங்க திறைசேரி தயார்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக தேர்தல் ஆணையாளர் கோரும் பணத்தை வழங்க திறைசேரி தயார் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கடந்த பாதீட்டு திட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும், தேர்தல் ஆணையாளர் அலுவலகம் ஏறக்குறைய 8 பில்லியன் ரூபாய் மதிப்பீட்டை அனுப்பியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அச்சிடுதல், பாதுகாப்பு, எரிபொருள், வாக்குப் பெட்டிகள் போன்ற எந்தவொரு அவசரத் தேவைக்கும் பணத்தை வழங்க திறைசேரி தயாராக இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (6)






## இராசிபலன்

28.07.2024
ஆடி 12 , ஞாயிற்றுக்கிழமை,
அட்டமி முன்னிரவு 11.17 மணிவரை

அச்சுவினி பிற்பகல் 4.04 மணிவரை
சுபநேரம் -9.02-10.32 மணிவரை
இராகுகாலம் -4.32-6.02 மணிவரை

சந்திராஷ்டமம்.
மகம், பூரம்

வளவன்

**மேஷம்** வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கனவு பலிதமுண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**ரிஷபம்** விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழபட வேண்டிய நாள், சுபகாரயச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று கூடும்.

**மிதுனம்** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**சிம்மம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்** குடும்பத்தினரிடையே அந்நியோனியம் அதிகரிக்கும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனக் குழப்பங்கள் அகலும், திருமண முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அதிஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கும்பம்** பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாடு பெருமை தரும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், போசன சுகமுண்டு.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் இடம்பெறலாம், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.

அளவற்ற செல்வமுடையவர்களுக்கு அளவற்ற தேவைகளும் உண்டு.

# ஆசிரிய தொழிலில் டிப்ளோமா படித்தவர்கள் உள்வீர்க்கப்படமாட்டார்கள்

## கல்வி அமைச்சு



(கொழும்பு)

டிப்ளோமா படித்தவர் கள் எதிர்காலத்தில் ஆசிரி யர் தொழிலில் சேர்த்துக் கொள்ளப் படமாட்டார்கள் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

வேகமாக மாறிவரும் அறி வக்க ஏற்ப ஆசிரியர்கள். மருத் துவர்கள் என ஒவ்வொரு தொழில் வல்லுநர்களும் தங் கள் அறிவைப் புதுப்பிக்க வேண்டும்.

இதற்கிடையில் ஆரம் பக் கல்வியின் அடிப்படை யான அழகியல் பாடத்தை ஒருபோ தும் பாடத்திட்டத்தில் இருந்து நீக்க முடியாது என்றும் செயற்கை நுண்ணறிவு மற் றும் தகவல் தொழிநுட்பம் ஆகிய பாடங்களை இணைத்து பாடசாலை பாடத்திட்டம் ஆக்கப் பூர்வமாக சர்வதேச தர கல் விக்கு உயர்த்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் அனைத்துக் கல்லூரிகளும் ஒரே பல்க லைக்கழகமாக இணைக்கப் படும் என்றும், 2028 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆசிரி யர்களாக நியமிக்கப்படுபவர்கள் இள நிலைக் கல்விப் பட்டதாரிக ளாக இருப்பார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

## பொன்விழாவை முன்னிட்டு கயிறு இழுத்தல் போட்டி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் பொன் விழாவை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் விளையாட்டுப் போட்டியும் கலைப் பண் பாட்டுப் பெருவிழா நிகழ்வில் ஆண்க ளுக்கான கயிறு இழுத்தல் போட்டியா னது இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு திபஜோதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 077 089 2897 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற் பாட் டுக்குழு அறிவித்தள்ளது. (6)

## நிறுவுநர் தினமும் நுழைவாயில் திறப்பும்

(யாழ்ப்பணம்)

யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி யாலயத்தின் 114 ஆவது நிறுவுநர் தினம், அதிபர்கள் தினம், நுழைவா யில் வளைவு திறப்புவிழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வானது எதிர் வரும் ஜுலை 31 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல்1.30 மணிக்கு வித்துவான் மு.விருத்தாசலம் மண்ட பத்தில் பாடசாலை அதிபர் எம்.சி சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பா ளரும் காலையடி மறு மலர்ச்சி மன்றத் தலைவருமான சுப்பிரமணியம் சுந்தர சிவம் கலந்து கொள்ளவுள்ளார். (6)


## தேவை

பிராமண உதவி அர்ச்சகர் தேவை. பின்வரும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 0778692341,0740180236

(1568)

## வீடு வாடகைக்கு உண்டு

நான்கு அறைகள் கொண்ட வீடு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வாடகைக்கு உண்டு. நிறுவனங்களிற்கு விரும்பத்தக்கது. தரகர்தேவை இல்லை.

தொடர்பு:- 077 321 2833

(c-2349)

## லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(3554)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

077 839 3974


## மணி விழா வாழ்த்து

யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையின் சிரேஷ்ட ஆசிரியர்

திருமதி **பரமபதி உதயகுமார்**

(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்)




**சேவைக் காலம்**

யா/தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தி (01.09.1992-10.01.1997)

யா/காங்கேசன்துறை ம.வி (11.01.1997-01.01.2001)

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை (02.01.2001-01.01.2014)

யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை (02.01.2014-27.07.2024)

மனிதரைப் புனிதராக்கும்
மாண்புறு பணியினாலே
கனிவுறும் அறிவுச் செல்வம்
கசடறப் போதித்தீரே
தன்னலம் கருதா தங்கள்
சால்புறும் சேவை என்றும்
கன்னலாய் உள்ளத்தில் நிற்கும்!
தரணியில் நீடு வாழ்க
குருவருள் அதனினாலே
திருவருள் கூட்டி நின்ற
திருமிகு பெரியீரே நீர் தேசுடனே
என்றும் வாழ்க

வாழ்த்துவோர் (சி-871)

பாடசாலை சமூகம்

யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை

## 90 ஆவது பிறந்த தின வாழ்த்துக்கள்

**வைத்திலிங்கம் கதிரவேலு**

(முன்னாள் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்)




தொண்ணூறு அகவை காணும்
எங்கள் ஆலமரமே
உங்கள் கிளைகளின் விருட்சங்கள்
விழுது விட்டு உம் நிழலில்
உம் அரவணைப்பில் வாழ்கின்றோம்
நெஞ்சில் உரம் கொண்டு
நேர்மைத்திறன் கொண்டு
வஞ்சமில்லா வாழ்வு வாழ்ந்தீர்கள்
அதற்கு அர்த்தங்களை எமக்குத் தந்தீர்கள்
தொண்ணூறல்ல இன்னும் நூறாண்டு
நீங்கள் நோய் நொடியின்றி வாழ
வாழ்த்தி மகிழ்கின்றோம்

அன்புடன் வாழ்த்துவோர்: (சி-866)

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட உயர் திரு.வைத்திலிங்கம் கதிரவேலுவின் பிள்ளைகளாகிய குபேந்திரன் பிரேமராணி குடும்பம் (கனடா) கதிரவேலு சத்தியேஸ்வரன் குடும்பம் (கனடா) சந்திரன் பவானி குடும்பம் (கனடா) கோபல்நாதன் கிருபாநிதி குடும்பம் (கனடா) தங்கேஸ்வரன் பவானி குடும்பம் (வட்டக்கச்சி)

சகோதரங்கள் மற்றும் மருமக்கள்: விஜயகுமார் ரேவதி குடும்பம் (உருத்திரபுரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 452
Viber 076 636 3378



# தமிழினத்தின் ஒற்றுமையை நிர்ணயிக்கும் சக்தி எது?

ஒரு திரைப்படத்தில் கவுண்டமணி பெற்றோல் மாக்ஸ் திருத்திக் கொண்டிருப்பார். அந்தநேரம் செந்தில் அங்கே வந்து என்ன அண்ணே செய்கிறீர்கள் எனக் கேட்பார்.

அதற்கு, அடேய், இதுதான் பெற்றோல் மாக்ஸ். இதை கொழுத்தினா பளீச் என்று வெளிச்சம் வரும் என்று விளக்கம் கொடுப்பார் கவுண்டமணி.

இதில் எப்படி அண்ணே வெளிச்சம் வரும் என மறுபடி செந்தில் கேட்க, டேய் இதைப் பாரு இதுதான் மான்றில். இந்த மான்றில் தான் அவ்வளவு வெளிச்சத்தைத் தருகிறது என மான்றிலை காண்பிப்பார் கவுண்டமணி.

அதற்கு போங்கண்ணே இதில் எப்படி வெளிச்சம் வரும் என்று கேட்டபடி மான்றிலைப் பிடித்து அமத்தி விடுவார் செந்தில்.



தமிழ்ப் பொது வேட்பாளர்

**அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைக்காமல், தமிழ் மக்களின் கருத்துக்களை கேட்டறியாமல் அவசர அவசரமாக பொதுவேட்பாளரை நிறுத்தி, அதில் தோல்வி காணுவோமாக இருந்தால்; தமிழினத்திடம் ஒற்றுமை இருக்கிறது என்று இலங்கை அரசுக்கோ, சர்வதேசத்திற்கோ இனியொருபோதும் நாம் கூற முடியாத சந்தர்ப்பத்தை அது தோற்றுவித்துவிடும்.**

மான்றில் உடைந்து விடும். அதன்பின் கவுண்டமணி செந்திலை போட்டு மிதிப்பது போல கதை செல்லும். இவ்விடயத்தில் எதற்கு இந்த மான்றில் கதை என்று தானே நீங்கள் கேட்கிறீர்கள்.

எதிர்வரும் செம்டெம்பர்-21 நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் பல்வேறு முன்னெடுப்புக்கள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றதல்லவா? இந்த முயற்சி; மான்றிலைத் தொட்டு இதிலிருந்து எப்படி அணேே வெளிச்சம் வரும் என செந்தில் கேட்பது போன்றதாய் அமைந்து விடக்கூடாது.

ஆம், எதிர்வரும் செப்டெம்பர்-21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பு வந்துவிட்டது. தேர்தல் திருவிழாவிற்கு இலங்கை திருநாடு தயாராகி விட்ட நிலையில் தமிழர் தரப்பில் தமிழர்களின் ஒற்றுமையினை பறை சாற்றவும், எம்மவர்கே எமது வாக்கு என்ற குவியத்தை வட, கிழக்கில் நிலை நாட்டவும் பொது வேட்பாளரை நிறுத்துவது என்ற தீர்க்கமான முடிவை தமிழ்த்தரப்பின் பல்வேறு கட்சிப் பிரமுகர்களும் பொது அமைப்புக்களும் இணைந்து ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் ஒற்றுமைப்பண்பை 2009 இற்கு முன்னர் 2009 இற்கு பின்னர் என இரு வேறாகப் பிரித்துப் பார்க்க முடியும்.

இதில் 2009 இற்கு முன்னர் தமிழ் மக்களிடம் இருந்த ஒற்றுமைக்கும் 2009 இற்குப் பின்னரான தமிழ் மக்களின் ஒற்றுமைக்கும் இடையில் மிகப்பெரும் வித்தியாசத்தை உணர முடியும்.

இதற்கு முற்றும் முழுதான பொறுப்பை தமிழ்த் தலைமைகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான நிலையில் பொதுவேட்பாளர் தொடர்பில் நாம் சிந்திப்பது சரியான முடிவா? தவறான முடிவா? என்பதை நாம் ஒன்றிற்கு நூறு முறை ஆராய வேண்டியது கட்டயாமானது.

தென்னிலங்கை அரசியல் தளத்தைப் பொறுத்தவரை வடக்கு, கிழக்கு தமிழர் தரப்பு வாக்குகளை வாங்குவதில் மிகத் தீவிரம் காட்டி வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வாய்ப்புக்களை அவர்களின் வருகையினூடே அவதானிக்க முடிந்தது. தெற்கை விட வடகிழக்கை முதன்மைப்படுத்துவற்குள் இருக்கும் அவர்களின் உள்ளார்ந்த அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

எப்படிப் பேசினால் தமிழர் பிரதேசத்தில் எடுபடும் என்பதை நன்கறிந்த இவர்களின் பேச்சுக்கள் தேர்தலை மையமாகக் கொண்டது என்ற உண்மையை சகலரும் அறிந்திலர். இங்கே தான் வாக்கு சிதறல்கள் உருவாக்கம் பெறுகின்றன.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க, சரத் பொன்சேகா, விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு அண்மையில் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் கறுப்பு ஜூலை கலவரத்திற்கு மன்னிப்புக் கோருவதாக விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

முள்ளிவாய்க்காலில் தமிழினத்தை கொத்துக் கொத்தாய் அழித்துவிட்டு பாலஸ்தீனத்தில் கொடுமை நடப்பதாய் அரசாங்கம் கண்டனம் தெரிவிப்பது வேடிக்கைக்குரியது என சஜித் பிரேமதாச கூறியிருக்கிறார்.

தமிழர்களுக்கு படையினர் மீது கோபமில்லை. அவ்வாறு இருந்திருந்தால் தமது பொன்னான வாக்குகளை எனக்கு அள்ளி வழங்கியிருக்க மாட்டார்கள் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறுகிறார்.

வடக்கு கிழக்கை பிரித்தது ஜே.வி.பி என்ற கருத்தை மறப்போம் அனைவரும் நாட்டை மீட்பதற்காய் ஒன்றிணைவோம் எனக் கூறுகிறார் அநுரகுமார திஸாநாயக்க.

இவ்வாறான கருத்துக்கள் அனைத்தும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கான யுத்திகளே. இந்நிலையில் தமிழ்பொது வேட்பாளர் தெரிவென்பது மிகத் தேவையுடைய தாயினும் இது ஒருவிஷப் பரீட்சைக்குரியதோ என்ற எண்ணப்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் எழாமல் இல்லை.

ஏனெனில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் மக்கள் மனங்களில் எவ்வித சிந்தனை ஓடுகின்றது என்பதை எவரும் அறிந்ததாய் இல்லை.

மாறாக மூடிய அறைகளில் இருந்து எடுக்கும் முடிவுகள் பிசகுமாக இருந்தால், அது தமிழினத்தின் தீர்வுவிடயத்தைப் பாதிப்பதாக அமைந்து விடும்.

தமிழினத்தின் ஒற்றுமையை உலகிற்கு பறை சாற்ற வேண்டிய தேவை இருக்கவே செய்கின்றது. ஆயினும் அதற்கு இது தகுந்த நேரமா என்பதையும் நாம் ஒப்பு நோக்க வேண்டும்.

ஏனெனில் தமிழர் தாயகத்தின் பழமையான கட்சியான தமிழரசுக்கட்சி பொதுவேட்பாளர் விடயத்தில் தனது கருத்தை இன்னமும் கூறாமல் இருப்பதையும் நாம் நுணுகி ஆராய வேண்டிய தேவை உண்டு.

இவை அனைத்தையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது இதுவரை காலமும் தமிழினம் பேரினவாத அரசை நம்பி வாக்களித்து ஏமாந்து போனதே மிச்சம் என்ற நிலையில், எமது பலத்தையும், எதிர்ப்பையும் காட்ட ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதென்பது மிகத் தேவையான ஒன்று.

அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைக்காமல், தமிழ் மக்களின் கருத்தினை கேட்டறியாமல் அவசர அவசரமாக பொது வேட்பாளரை நிறுத்தி, அதில் தோல்வி காணுவோமாக இருந்தால் தமிழினத்திடம் ஒற்றுமை இருக்கிறது என்று இலங்கை அரசுக்கோ, சர்வதேசத்திற்கோ நாம் இனியொருபோதும் கூறமுடியாத சந்தர்ப்பத்தை அது தோற்றுவித்துவிடும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு


சரவணமுத்து கருணாகரன்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

தமிழ் ஆசிரியர் கருணாகரன் காலமாகி விட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

சிறந்த முறையில் தமிழைக் கற்பிக்கும் ஆற்றல் பெற்றிருந்த கருணாகரன், சிறந்த பட்டிமன்றப் பேச்சாளர், அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றத்தின் பட்டிமன்றங்களில் கருணாகரன் பங்கேற்று தனது ஆளுமையை வெளிப்படுத்தியவர்.

அவரின் இழப்புப் பேரிழப்பாகும். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டுவிட்டது.

இனி ஒரே அமர்க்களம் தான் போல.

இவ்வாறு கங்காணி கூற, இடையில் குறுக்கிட்ட மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம், ஆலடியில அரசியல் வேண்டாம்.

அதிலும் எங்கட அரசியலைக் கதைக்கிறதை விட, மௌன விரதம் இருக்கிறது மேல்.

விதானையார்:- என்ன வாத்தியார் சொல்லுறியள்.


வாத்தியார்:-வேற என்ன எங்களிட்ட ஆன அரசியல் இருக்குதோ எல்லாரும் ஏதோவொரு நிகழ்ச்சி நிரலில் இயங்குகினம்.

தமிழ் மக்களுக்காக் குரல் கொடுப்பதற்கு ஒருவர் இல்லை.

பிறகேன் நாங்கள் அரசியலைக் கதைத்துக் காலத்தை வீணடிப்பான்.

மூப்பர்:- வாத்தியார் சொல்லுறது நூறுவீதம் உண்மை தான். இந்தாப்பாருங்க, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் ஓர் உடன்படிக்கை எழுதப்பட்டிருக்குது.

ஆனால் அந்த உடன்படிக்கையில இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



## நோயாளரை அந்நியப்படுத்தும் ஆயுள்வேத வைத்தியசாலை

யும் கையொப்பமிடவில்லை.

அப்படியெண்டால், பொது வேட்பாளர் என்ற விடயத்தில எங்களிட்ட இன்னமும் ஒற்றுமை ஏற்படவில்லை என்பது தெரியுது தானே.

விதானையார்:- மூப்பர் சொல்லுவதில நியாயம் இருக்கத்தான் செய்யுது.

தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது என்ற விடயத்தில இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கையொப்பமிடாவிட்டாலும் பரவாயில்லை, அந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்களில் பொது வேட்பாளருக்கு ஆதரவாக இருக்கிறவர்களை அவர்களின்ர சம்மதத்தோட வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால் அதுவும் நடக்கல்ல.

அப்ப எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துகின்ற விடயத்தில இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் உடன்பாடு இல்லை என்பது போல நிலைமை உருவாகும்.

இந்த நிலையில பொது வேட்பாளர் என்ற எண்ணக்கரு எந்தளவு தூரம் வெற்றியடையும் என்ற கேள்வி எழும் தானே!

வாத்தியார்:- இஞ்சே விதானையார் எங்களுக்கு உரிமை கிடைக்கிறதாக இருந்தால், அது தமிழீழ விடுதலை புலிகளின்ர காலத்தில நடந்திருக்க வேணும் அல்லது வன்னிப் போரில எங்கட தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டது தொடர்பில, சர்வதேசம் நடவடிக்கை எடுத்து அதன் மூலம் எங்கட உரிமை உறுதி செய்யப்பட்டிருக்க வேணும்.

அது எதுவும் நடக்கல்ல எனும் போது, இனி என்ன நடந்தாலும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான்.

சாத்திரியார்:- அப்ப வாத்தியார் இப்படியே எங்கட பிரச்சினையை விட்டிட்டு இருக்கிறதோ!

வாத்தியார்:- சாத்திரியார் முதலில் ஓர் இனம் எழுச்சி பெற வேண்டுமென்றால், அதின்ர அரசியல் தலைமை நேர்மையாகவும் துடிப்பாகவும் இயங்க வேணும்.

தவிர, அந்த அரசியல் தலைமை ஒற்றுமையோடு இயங்க வேணும்.

ஆனால் எங்களிட்ட அந்த ஒற்றுமை இருக்குதோ அதுவும் இல்லை.

சரி, எங்கட அரசியல் தலைமை தான் வாய்க்கல்ல எண்டால், எங்கட புத்திஜீவிகளின்ர நிலை எப்படி இருக்குது.

ஒரு காலத்தில நாங்கள் கையெடுத்துக் கும்பிட்ட மருத்துவர்கள் தான் இப்ப கடும் விமர்சனத்திற்கு ஆளாகியிருக்கினம்.

அதுமட்டுமல்ல ஆலயங்கள் என்பது ஆத்மாக்களை லயப்படுத்துகின்ற இடம்.

ஆனால், அங்க நடக்கிற அநியாயம் சொல்லிமாளாது. அதிலும் சைவாலயங்களில இருக்கிற நகைகள் களவு போற அளவில தான் நிலைமை இருக்குது.

இதைவிட பூசை வழிபாடுகளை நடத்துகிற சிவாச்சாரியார்களிட்ட இறை நம்பிக்கை அறவே இல்லை.

விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில சிவாச்சாரியார்கள் ஆசாரசீலர்களாகவும் இறை நம்பிக்கையுடையவர்களாகவும் இருப்பதால ஏனையவர்கள் தங்கட காலத்தைக் கொண்டு நகர்த்துகினம்.

மற்றும்படி பூசை வழிபாடு செய்கின்ற சிவாச்சாரியார்களில் கணிசமானவர்களின் முழு நோக்கமும் பணம் சம்பாதிப்பது தான்.

இத்தகையவர்கள், ஆசாரத்தையும் கடைப்பிடிக்காமல், பூசை வழிபாடுகளையும் ஒழுங்காகச் செய்யாமல் மக்களை ஏமாற்றுகினம்.

இவ்வாறு வாத்தியார் மூச்சு வாங்காமல் கூற, இடையில் குறுக்கிட்ட பண்டிதர் பரமலிங்கம், வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை.

சில ஆலயங்களில ஆண்டவனுக்கு வைக்கிற பிரசாதங்களைப் பார்த்தால் சீ எண்டு போகும். அந்தளவுக்கு பிரசாதம் தயாரிப்பதில துப்புரவு இல்லை.சுவை இல்லை.ஏதோ நாய் பேய்க்குப் படைக்கிற மாதிரி பிரசாதம் செய்யினம்.

அண்மையில ஒரு ஆலயத்தில அபிஷேகம் நடந்தது. அதில கடவுளுக்கு படைக்கப்பட்ட மோதகத்தைப் பார்த்து ஆலயத்திற்கு வந்தவர்கள் ஏங்கிப் போயிற்றினம். அவித்த கோதுமை மாவில தேங்காய்ப் பூவையும் சர்க்கரையையும் வைச்சு பாண்டல் எண்ணெயில அதைப் பொரிக்க, மோதகம் முழுவதும் வெடித்து அதற்குள் எண்ணெய் போயிற்று. பிறகு எப்படி அந்த மோதகத்தைச் சாப்பிடுவது.

இறைவனுக்குப் படைக்கிற பிரசாதத்தைக் கூட பய பக்தியோட செய்து படைக்காத சிவாச்சாரியார்கள் இருக்கும் போது அறம் காப்பாற்றபடுமோ.

ஆக, நேர்மையற்ற அரசியல் தலைமை, பூசை வழிபாட்டை முறையாக நடத்தாத சமய சிவாச்சாரியர்கள் இருக்கும் போது எப்படி எங்கட இனம் வாழும் வளரும்.

இவ்வாறு பண்டிதர் சீற்றத்தோடு கூற, ஆலடியில் அமைதி ஏற்பட்டது.

அமைதியைக் குலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

சிறாப்பர்:- எல்லாம் உண்மை தான். கடந்த சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் இயங்குகிற ஓர் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு மருந்து எடுக்கப் போனன்.

அங்க இப்பவும் கொரோனாத் தொற்று காலம் போல வைத்தியருக்கும் நோயாளிக்குமிடையில நீண்ட இடைவெளி.

நோயாளி மருத்து வரை கிட்டவும் நெருங்க ஏலாது எண்டால் பாருங்களன்.

மூப்பர்:- அப்ப நல்ல காலம். இவையளும் ஆங்கில வைத்தியசாலையில இருந்தா நிலைமை படுமோசமாகி இருக்கும்மாக்கும்.

இவ்வாறு மூப்பர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களைக் கொன்று குவித்துவிட்டு பாலஸ்தீனத்திற்காக குரல் கொடுக் கிறார்கள் என அரசைச் சாடுகிறாரே சஜித்?

**சுதன் — குப்பிளான்**

**ஜனாதிபதித் தேர்தல் களத்தில் தமிழ்ப் பொது வேட்பாளருடன் சேர்ந்து ஆறு பேர் என்றால் நாறப் போகிறதே கதை?**

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்கும் அனைவரும் வடக்கை மையப் படுத்தி தீவிரமாகச் செயற்படுகின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.
தமிழரின் வாக்குகள் நிச்சயம் வெற்றி யைப் பெற்றுத் தரும் என்பது ஒரு பக்கம் இருந்தாலும் தமிழருக்குத் துணிந்து வாக் குறுதி கொடுக்கலாம். அதன் பின் அவ் வாக்குறுதிகளை குழி தோண்டிப் புதைத்து விடலாம்.
அவர்கள் அதை ஏனென்று கூடக் கேட்க மாட்டார்கள் எனும் அசாத்திய நம்பிக்கை யுடன் வாக்கு வேட்டைக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

**சி.இளங்கோ — மானிப்பாய்**

**மக்களின் சேவையாளர்களே உத்தியோகத் தர்கள் என்ற கருத்தை ஏன் நாம் ஏற் கின்றோம் இல்லை?**

படித்துப்பட்டம் பெற்று ஒரு பதவிக்கு நியமனம் பெற்று அதிகாரக் கதிரையில் இருந்தவுடன் குறித்த சில அதிகாரிகளுக்கு எங்கிருந்து தான் மமதை வருகிறதோ தெரியவில்லை.
சேவை நாடி வருபவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படை அறிவு கூட இல்லாதவர்கள் போலவும் தமக்குத் தான் எல்லாம் தெரியும் என்பது போலவும் அவர்கள் பேசும் பேச்சைக் கேட்கும் போது கோபம் பொத்திக் கொண்டு வரும்.
பொது மக்கள் பிச்சை எடுத்துக் கொடுக்கும் வரிப்பணத்தில் குளிரூட்டியைக் கூட்டிவிட்டு கடும் சூடாய்க் கதைப்பவர்களுக்கு கம்பி காய்ச்சிச் சூடு வைக்க ஆள் இல்லாமல் போய்விட்டதே.

**விஜயகுமார் — முகமாலை**

**பொதுவேட்பாளர் தொடர்பில் தங்கள் கருத்து?**

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் உலக நாடு களின் பலத்த எதிர்பார்ப்பிற்கு மத்தியில் நடை பெறும் ஒரு தேர்தல்.
பொதுவேட்பாளர் விடயத்தில் ஒன்றிற்கு நூறு முறையோசனைசெய்து முடிவெடுக்கவேண்டும்.
தமிழினத்தின் ஒட்டு மொத்த பலத்தையும் காட்ட முடியும் என்ற ஒப்பற்ற நம்பிக்கை இருந்தால் மட்டுமே இந்த விசப்பரீட்சையை நாம் கையில் எடுக்க வேண்டும்.
ஒருவேளை பொது வேட்பாளருக்கு குறைந்த வாக்குகள் கிடைக்குமாக இருந்தால், தமிழினத் திடம் ஒற்றுமையீனம், பிழவுகள் இருப்பதை நாமே இலங்கை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் கூறுவதாய் அமைந்துவிடும்.
சுருங்கக் கூறினால் எமது பல்லின் ஊத் தையை எடுத்து மற்றவருக்கு காட்டுவதாய் பொது வேட்பாளர் விடயம் அமைந்து விடக் கூடாது.




**அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுந்தரம் — துன்னாலை**

**விஜயதாச, சஜித் போன்றோர் தமிழர்கள் பற்றிப் பாராளுமன்றில் பேசுகின்றனரே?**

மழை பொழிவது பொது நலம்.அதில் குடை பிடிப்பது சுயநலம்.
தேர்தல் என்ற பொது நல மழையில் ஓட்டுக்கள் வாங்கும் சுய நலக் குடை பிடிப்புக்கள் இது மட்டுமல்ல இன்னும் நடக்கும். நடந்து கொண்டே இருக்கும்.
பொறுத்திருந்து பாருங்களேன் செப்ரம்பர்-21 இற்குள் இன்னும் என்னென்ன நாடகங்கள் நடக்கப் போகின்றன என்பதை.

**மதுவன் — மீசாலை**

**முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களைக் கொன்று குவித்துவிட்டு பாலஸ்தீனத்திற் காக குரல்கொடுக்கிறார்கள் என அரசைச் சாடுகிறாரே சஜித்?**

நூற்றுக்கு நூறு விகிதம் உண்மை.ஆனால் வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழினம் கொன்று குவிக்கப்படும் போது எதிர்க்கட்சித் தலைவரும் அந்த அப்பாவி மக்களுக்காகக் குரல் கொடுக்க வில்லையே.
அனைத்தும் நடந்து முடிந்ததற்குப் பின்னர் அனுதாபம் தெரிவிப்பதில் பயன் ஏதும் இல்லை.
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்க ளின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள இவ் வாறான யுக்திகள் கையாளப்படும் என்ற பெரும் உண்மை மக்களுக்கு நன்கு தெரியும்.



தமிழர் தேசத்தில் தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படியாக இருக்கும்?

**சிவயோகன் — புளியங்குளம்**

**ஒரு துறையில் சாகும் வரை இருப்பது பெருமையா? அல்லது எத்துறையில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து அத் துறையில் முழுமையான சேவையைச் செய்து விட்டு மடிவது சிறப்பா?**

பதவியில் இருந்து கொண்டு எதுவும் செய்யாமல் எந்தப்பக்கத்தால் சுரண்டி எமது வங்கிக் கணக்கை நிறைக்கலாம் என்ற புத்தியுள்ளவர்கள் பென்சன் தாண் டியும் அந்தக் கதிரையை உரஞ்சிக் கொண்டிருப்பார்கள். அதைவிட சொற்ப காலமெனினும் மக்களுக்கு உண்மை யாய், நேர்மையாய் சேவை செய்து மடி வது எவ்வளவோ மேல்.
இதைப் புரிந்து கொள்ள வேண்டி யவர் கள் புரிந்து கொண்டால் சரி.

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**தமிழர் தேசத்தில் தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படியாக இருக்கும்?**

இன்னும் ஐம்பது வருடத்தில் எம் பிரதான உணவு பால்சோறு. எம் பாரம்பரிய கலை கண்டிய நடனம்.
எம் இனத்தின் வரலாறு கூறும் ஆதி நூல் மகாவம்சம் என்றாகும்.
எம் பாரம்பரிய உடையான சேலையின் தாவணி வலப் பக்கத்திற்கு மாறும்.
எம் தமிழ் இறுதி மன்னன் சங்கிலியனின் பெயர் சங்கிலிய என மாற்றமுற்றிருக்கும்.
யாழ்ப்பாணம் யாழ்ப்பாணய என்ற பெயர் பலகையுடன் மிளிரும்.
இலங்கையின் தலை யாழ்ப்பாணம். ஆகையால் இலங்கையின் தலைநகரம் யாழ்ப்பாணமாக உயர்ந்து நிற்கும்.
இதில் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் இருப்பார்களா என்பது தான் சிந்திக்க வேண்டிய விடயம்.

**விஜயதரன் — உரும்பிராய்**


**தமிழ் பொது வேட்பாளர் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக...?**

உடைந்து நிற்கும் தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றிணைவது காலத்தின் தேவை. இதைத்தான் தமிழ் மக்களும் விரும்புகிறார்கள்.
ஆயினும் இந்த இணைவு பொது வேட் பாளருடன் முற்றுப் பெற்றுவிட்டால் இந்த இணைவுக்குப் பலன் இல்லாது போய் விடும்.
ஆதலால் இந்த ஒப்பந்தம் ஒப்பற்ற ஒப் பந்தமாக இருக்க வேண்டும். அரசியல் விருப்பு, வெறுப்புக்களைத் தாண்டிய புரிந் துணர்வாக இருக்க வேண்டும்.
தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுத் தரவல்ல ஒற்றுமையாக இருக்க வேண் டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: திருவிளையாடல்
இசை: K.V மகாதேவன்
பாடியவர்: T.M சௌந்தர்ராஜன்
வரிகள்: கண்ணதாசன்



ஆ...ஞா ஆ...ஞா ஆ...ஞா

பாட்டும் நானே பாவமும் நானே...

பாட்டும் நானே பாவமும் நானே
பாடும் உனை நான் பாடவைத்தேனே
பாட்டும் நானே பாவமும் நானே
பாடும் உனை நான் பாடவைத்தேனே
பாட்டும் நானே பாவமும் நானே..ஏ..ஏ..

கூட்டும் இசையும் கூத்தின் முறையும்
காட்டும் என்னிடம் கதை சொல்ல வந்தாயோ?
கூட்டும் இசையும் கூத்தின் முறையும்
காட்டும் என்னிடம் கதை சொல்ல வந்தாயோ?

பாட்டும் நானே பாவமும் நானே
பாடும் உனை நான் பாடவைத்தேனே...

அசையும்..பொருளில்..இசையும் நானே
அசையும் பொருளில் இசையும் நானே
ஆடும் கலையின் நாயகன் நானே
அசையும் பொருளில் இசையும் நானே
ஆடும் கலையின் நாயகன் நானே
எதிலும் இயங்கும் இயக்கம் நானே

என்னிசை நின்றால் அடங்கும் உலகே..ஏ..
நான் அசைந்தால் அசையும் அகிலமெல்லாமே..
நான் அசைந்தால் அசையும் அகிலமெல்லாமே
அறிவாய் மனிதா உன் ஆணவம் பெரிதா?
நான் அசைந்தால் அசையும் அகிலமெல்லாமே
அறிவாய் மனிதா உன் ஆணவம் பெரிதா?
ஆலவாயனொடு பாடவந்தவனின்
பாடும்வாயை இனி மூடவந்ததொரு

பாட்டும் நானே பாவமும் நானே
பாடும் உனை நான் பாடவைத்தேனே

# வன்முறைக்காடான வங்கதேசம்!



வங்கதேசம், வன்முறைக் காடாக மாறியிருக்கிறது. என்ன பிரச்சினை அங்கே 1971 ஆம் ஆண்டு, வங்க தேசம் தனிநாடாக உதய மான சமயத்தில், பாகிஸ் தான் இராணுவத்துக்கு எதி ரான போரில் பல நூறு பேர் உயிரிழந்தனர்.


தனிநாடு உருவாக, பாகிஸ்தானுடன் போரிட்டு உயிர்த்தியாகம் செய்தவர் களின் வாரிகளுக்கு, அரசு வேலைகளில் 30 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கி வந் தது வங்கதேச அரசு. இந்த நடை முறைக்கு எதிராகப் போராட் டங்கள் வெடித்த நிலையில், இட ஒதுக்கீட்டை 2018 இல் ரத்து செய்தது வங்கதேச அரசு. மீண்டும் இட ஒதுக்கீடு கோரி தொடுக் கப்பட்ட வழக்கில் அரசின் உத்தரவை ரத்து செய்து, மீண்டும் சுதந்திரப் போராட் டத் தியாகிகளின் வாரிசுக ளுக்கு இட ஒதுக்கீடு வழங்க, கடந்த வாரம் உத்தரவிட்டது வங்கதேச உயர் நீதிமன்றம் இதனால் ஆத்திரமடைந்த வங்கதேச இளைஞர்கள், வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கினர். முதலில் பல்கலைக்கழக மாணவர் கள் மட்டுமே ஈடுபட்ட இந் தப் போராட்டத்தில், அடுத் தடுத்த நாள்களில் அனைத் துத் தரப்பு மக்களும் கலந்து கொண்டனர்.

"பிரதமர் ஷேக் ஹசீனா, தன் ஆதரவாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங் கவே இந்த இட ஒதுக்கீட் டைக் கொண்டு வருகிறார். அதனால் தான், நீதிமன்ற உத்தரவை உடனடியாக அமல்படுத்தத் துடிக்கிறார். கோடிக்கணக்கான இளை ஞர்கள் வேலை வாய்ப்பில் லாமல் தவித்துக் கொண் டிருப்பது பற்றி அவருக்குக் கவலையில்லை என்று குமு றினார்கள் போராட்டக்கா ரர்கள்.

இதனால், அமைதிப் போராட்டம் வன்முறைக் களமாக மாற, துப்பாக் கிச்சூடு நடத்தி, 100 இற் கும் மேற்பட்ட போராட்டக் கா ரர்களைச் சுட்டுக் கொன்றி ருக்கிறது வங்க தேச அரசு.

இந்த நிலையில், இட ஒதுக்கீடு பிரச்னையில் வங்கதேச உயர் நீதி மன்ற உத்தரவை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேல் முறை யீட்டில் தீர்ப்பு வழங் கப்பட்டிருக்கிறது. அதில், "இனி அரசு வேலை க ளில் சுதந்திரப் போராட் டத் தியாகிளின் வாரிசுகளுக்கு 5 சதவிகிதம் மட்டுமே இட ஒதுக்கீடு. தகுதியின் அடிப்படையில் 93 சத விகிதமும், சிறுபான் மை யினர், மாற்றுத்திற னாளி களுக்கு இரண்டு சத விகி தமும் அரசுப்பணிகளில் இடஒதுக்கீடு வழங் கப்பட வேண்டும்" என்று உத் தரவிடப்பட்டிருக்கிறது.

இந்தத் தீர்ப்புக்குப் பிறகு, வங்கதேசம் படிப் படியாக இயல்பு நிலைக் குத் திரும்பிக்கொண்டி ருக்கிறது!



## சங்குநாதத்திற்கு எழுதுங்கள்

**உங்கள் அபிமான சங்குநாதத்தில்**

- கவிதைகள்
- கட்டுரைகள்
- அரசியல் விமர்சனங்கள்
- ஊர் புதினங்கள்
- நீங்கள் ரசித்த விடயங்கள்

என்பவற்றை உங்கள் முழுப்பெயர், முகவரியுடன் எழுதி அனுப்புங்கள்

ஆசிரியர், வலம்புரி-சங்குநாதம், இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூளையில் சிப்; நினைத்தாலே நடக்கும் காரியங்கள்... எலான் மஸ்க்கின் அதிரடி அறிவியல் ஆராய்ச்சி!

நியூராலிங்க் நிறுவனம், இரண்டாவதாக ஒரு நோயாளருக்கு விரைவில் மூளை உள்வைப்பு (Brain implant) சிகிச்சையை செய்யவிருப்பதாக அறிவித்திருக்கிறார், அந்நிறுவனத்தின் சி.இ.ஓ-வான எலான் மஸ்க்.

"என்னது, பிரைன் இம்ப்ளான்ட் சிகிச்சையா?"என்று ஆச்சர்யப்படுகிறீர்களா?! ஆம்! ரோபோக்களை "மாதிரி" மனிதர்களாக மாற்றிக்கொண்டிருந்த சிப்கள், நோய் பாதிப்பால் இயங்க முடியாத மனிதர்களுக்கான விடியலையும் தர தற்சமயம் ஆயத்தமாகின்றன. மனித மூளையைக் கணினியோடு இணைத்து, தகவல் களைப் பரிமாறுவதன் மூலம், விஞ்ஞானத் தொழில்நுட்பம் மருத்துவத்தை ஆரத்தழுவும் அதிசயமிது.

ஒரு விபத்தால் கழுத்துக் கீழ் மொத்தமாகச் செயலற்றுப்போய் இருந்தவர், அமெரிக்காவைச் சேர்ந்த நோலண்ட் அர்பாக். கடந்த மார்ச் மாதம், அவர் கணினியோடு செஸ் விளையாடிய வீடியோ வைரலானது.செஸ் காயினை எப்பக்கம் நகர்த்த வேண்டும் என்று அவர் யோசித்தால் போதும். திரையில் கர்ஸர் தானாகவே நகர்ந்தது. கையையோ மௌஸையோ நகர்த்தும் அவசியமின்றி, தனது மூளையில் தோன்றிய எண்ணங்களால் கணினியை இயக்கினார். இது எப்படி சாத்தியமாயிற்று?

எல்லாம், கடந்த ஜனவரியில் நியூராலிங்க் (Neuralink) நிறுவனம் அவருக்குச் செய்த மூளை உள்வைப்பது அறுவை சிகிச்சையும், அதில் பொருத்தப்பட்ட சிப்பின் சிறப்பும் தான். "டெலிபதி" என்று பெயரிடப்பட்ட அந்த மிகச்சிறிய கருவியில் இணைக்கப்பட்ட 64 நூல் போன்ற அமைப்புகள் ஒவ்வொன்றிலும் தலா 16 என மொத்தம் 1024 எலக்ட்ரோடுகள் (பேட்டரிகளின் இருமுனைகள்) இடம்பெற்றன. எல்லாம் சேர்ந்தே, ஒரு நாணயத்தின் அளவுதான் இருந்தது. மண்டையோட்டின் சிறுபகுதி நீக்கப்பட்டு, இக்கருவி உள்ளே பொருத்தப்பட்டு, அடைக்கப்பட்டது. இரண்டு மாதங்கள் கழித்து, நோலண்ட் செஸ் விளையாடிய லைவ் வீடியோ காட்சிகள் வைரலாகின.

**சிக்னல் கொடுத்தால் போதும்!**

நியூராலிங்க்கின் பிரைன் இம்பிளான்ட் சிப், விரைவில் இரண்டாவதாக ஒரு நபருக்குப் பொருத்தப்பட உள்ளது. இந்தத் தொழில்நுட்பத்தில் கணினி, ஸ்மார்ட்போன்களை எண்ணங்களாலே கட்டுப்படுத்துவது மட்டுமல்ல, எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக் கருவிகளையும் இருந்த இடத்தில் இருந்தே ஆன் செய்வது, ஆஃப் செய்வது, வேகம், சத்தம் எனப்பலவற்றையும் மாற்றுவது ஆகிய எல்லாமே சாத்தியமே.

குறிப்பாக, மருத்துவக் காரணங்களால் இயக்கமற்ற நிலைக்குத் தள்ளப்படுபவர்களுக்கு, சர்வலோக நிவாரணத்தை வழங்கக்கூடியது இந்தப் பிரைன் இம்பிளான்ட் சிப். இது செயலற்ற நிலையில் இருப்பவர் நினைப்பதை அவரது மூளையின் செயல்பாடுகள் மூலமாகப் புரிந்துகொண்டு, இணைக்கப்பட்ட கருவியான மொபைல்ஃகணினிக்கு அதைச் செய்து முடிக்கச் சொல்லி சமிக்ஞை (சிக்னல்) வாயிலாக உத்தரவிடும். ஆணை நிறைவேற்றப்படும்.

இந்த ஆய்வு பயணிக்கும் திசை என்ன, நோக்கம் என்ன என்பது குறித்த எலான் மஸ்க்கின் தெளிவான அறிவிப்புகள் மக்களை வசீகரிக்கின்றன. உதாரணமாக, பக்கவாதத்தால் அவதிப்படுபவர்களை நடக்கவைப்பதும், பிறவியிலேயே பார்க்க முடியாதவர்களை பார்க்க வைக்கவும் வருங்காலத்தில் முடியும் என்று கூறும் அவரது நம்பிக்கையும், இதற்கான கூடுதல் விளம்பரத்தை ஈட்டித் தருகிறது.எதிர்கால மனிதன்..?

இப்போது, இரண்டாம் நபருக்கான ஆய்வில் முழு வீச்சில் இறங்கியுள்ளது நியூராலிங்க். எல்லா வகையிலும் அது முந்தைய மாடலைவிட மேம்படுத்தப்பட்டதாக இருக்குமென்கிறார் எலான் மஸ்க். 'நியூராலிங்க் சிப் பொருத்தப்பட்ட அடுத்தடுத்த நபர்கள் சூப்பர் பவர் பெற்றவர்களாக மாறுவார்கள்' என்று அவர் சொல்லியிருப்பதில் பூடகமாக ஏதோ விஷயமிருக்கிறது என்கிறார்கள் பலர்.

எனினும், ஒரு மனிதனின் அந்தரங்கம் மொத்தத்தையும் பெட்டகமாகப் பாதுகாக்கும் மூளையின் ரகசியங்கள் அத்தனையும், பலரின் பார்வைக்கும் விருந்தாகும் அபாயமும் கவனத்திற்குரியது.

என்றாலும், பிரைன் இம்பிளான்ட் ஆய்வுகள் வெற்றி பெற்றால், உடல் சார்ந்த குறைகளுக்கான நிவாரணியாக மட்டுமல்ல, எதிர்கால மனிதன் சிந்திகும் விதத்தைக்கூட சிப்கள் மாற்றி அமைக்கலாம் என்கிறார்கள் வல்லுநர்கள்.

மொத்தத்தில், எலான் மஸ்கின் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்கள் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறதென முடிவுசெய்துகொண்டிருக்க, அவரது நியூராலிங்க் நிறுவனமோ, எதிர்கால மனிதன் எப்படி இருப்பான் என்பதைத் தீர்மானிக்கும் வேலையில் மும்முரமாகியிருக்கிறது.

# ஆயுளை அதிகரிக்கும் மருந்து கண்டுபிடிப்பு

எலிகளின் ஆயுளை அதிகரிக்கும் பரிசோதனையில் சாதகமான முடிவுகள் கிடைத்திருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இது, மனிதர்களின் ஆயுளை அதிகரிக்கும் சோதனைக்குத் தூண்டுகோலாக இருக்கும் என்று கருதப்படுகிறது.


சிங்கப்பூரில் உள்ள டியூக்- என்.யு.எஸ். மருத்துவப் பள்ளி விஞ்ஞானிகள் மற்றும் லண்டனில் உள்ள மெடிக்கல் ரிசர்ச் கவுன்சில் லேபரட்டரி ஆஃப் மெடிக்கல் சயின்ஸ் மற்றும் இம்பீரியல் காலேஜ் விஞ்ஞானிகள் இது தொடர்பான ஆய்வை மேற்கொண்டனர்.

இதில், மருந்து செலுத்தி இன்டர்லூகின்-11 (IL-11) என்ற புரதத்தைத் தடுப்பதன் மூலம் எலிகளின் வயோதிகம் குறைவதையும், ஆயுட்காலம் அதிகரிப்பதையும் கண்டறிந்துள்ளனர். பொதுவாக, இன்டர்லூகின்-11 புரதமானது எலிகளின் உடலில் வயதான தன்மையை உண்டாக்குகிறது கொழுப்பு உருவாக்கம் மற்றும் தசை இழப்பை ஏற்படுத்துகிறது.

புதிய கண்டுபிடிப்பின்படி, மருந்துகள் செலுத்தப்பட்ட எலிகள் சராசரியாக 155 வாரங்கள் வாழ்ந்தன் சிகிச்சை அளிக்கப்படாத எலிகள் 120 வாரங்களே இருந்தன. 75 வார வயது முதல் இறக்கும் வரை மருந்து கொடுக்கப்பட்ட எலிகளின் சராசரி ஆயுட்காலம், ஆண் எலிகளில் 22.4 வீதம் மற்றும் பெண் எலிகளில் 25 வீதம் அதிகரித்துள்ளது.

இந்தக் கண்டுபிடிப்புகள் எலிகளில் மட்டுமே இருந்தாலும், வயதான மனிதர்களிடமும் மருந்துகள் இதேபோன்ற விளைவை ஏற்படுத்தக்கூடும் என்பதற்கான சாத்தியத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

சிங்கப்பூர் டியூக்- என்.யு.எஸ் மருத்துவப் பள்ளியின் இணை ஆசிரியராக இருந்த அனிசா விட்ஜாஜா "பரிசோதனைகளை நாங்கள் எலிகளில் செய்திருந்தாலும், இந்தக் கண்டுபிடிப்புகள் மனித ஆரோக்கியத்திற்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று நம்புகிறோம். மனித செல்கள் மற்றும் திசுக்களின் ஆய்வுகளில் இதே போன்ற விளைவுகள் இருக்கக்கூடும்" என்றார்.




Old $Il11^{+/+}$ Old $Il11^{-/-}$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளி கொடுப்போம்

இயந்திரமாய் ஓடும்
இனிமையான வாழ்க்கையில்
இலங்கை மின்சாரத்தை
இருட்டில் கடன் வாங்கும்
இயந்திர மானிடர் நாம்
இலவசக் கல்வியை
இணையத்தின் வழியாகவும்
இலவச மருத்துவத்தை
இலஞ்சம் வழியாகவும் பெற்று
போதையில் மயக்கத்தையும்
பொருளாதாரத்தில் வீழ்ச்சியையும்
இல்லத்தில் இருட்டையும்
உள்ளத்தில் வலியையும் சுமந்து
வாழ்க்கையில் விடியலைத் தேடி
ஓடும் மானிடா!
சற்று நின்று நிதானமாய் யோசி
இலட்சியத்தை எண்ணத்தில் கொண்டு
இலஞ்சத்தை நாட்டில் ஒழித்து
உள்ளத்துக்கும் இல்லத்துக்கும்
லாம்மையும், குப்பி விளக்கையும் கொண்டு
ஒளி கொடு-முடியாவிட்டால்
மின்சாரத்தை தேடி ஓடாது
மின்மினிப் பூச்சியைத் தேடிப்பிடித்து
ஒளி கொடு உன் முயற்சியால்
நம் நாட்டிற்கு

அருளப்பு ஞானப்பிரகாசம்,
கரம்பொன், ஊர்காவற்றுறை.

## மோசம்



ஆளுக்கொரு அரசியலில்
சுயநல சிந்தனையால்
வேறறுந்த விருட்சங்களாய்
நாம் வீழ்ந்து கொண்டிருப்பது
தெரியாமல் கோரங்களுக்கும்
கொடுமைகளுக்கும் வேகங்களுக்கும்
கை கொடுத்து பொறுப்புக்களை
புறம் தள்ளி ஏணி வைத்து
ஏற்றுகிறோம் முள்ளிவாய்காலில்
மீதமுள்ள மரணங்களை
நம் தேசத்து வீதிகளில்

தேன்நிலா


## அவலப் பொழுதுகள்

வெறித்தனத்தில் படுத்துக்கிடக்கிறது
எங்கள் இளமைகள்
பழிக்குப் பிறந்தாற்போல்
துளியேனும் பக்குவமற்றுக் கிடக்கிறது
அழிக்கவும் அறிவுரைக்கும்
அஞ்சாத பிரபஞ்சம்
தெருக்களில் கரும்புகை மட்டும்
தேங்கிக் கிடக்கிறது
கண்ணுக்குள் கிட்டாத வேகம்
அந்தரத்தில் நிரந்தரமாகிய வாழ்க்கை
ஏதோ பொழுதை முழுங்குவதாய் எண்ணம்
மரணச் செய்தி மட்டும் மிச்சம்
பாவம் இயந்திரங்கள்
மனித போட்டிக்கு இரையாகி விட்டன
ஒவ்வொரு கணமும் புளியைக்
கரைத்தபடியே மனங்கள்
தெருவைக் கடக்கின்றன

யாழ் வாகீஷ்



## மௌனத்தின் தேடல்- 726




## செயல் வீரனாய் இரு

நாக்காலே பேசாமல்
செயலிலே காட்டு!
நாடு உனை வாழ்த்தும்
உன் சந்ததியும் போற்றும்
பாம்பெனவே விசம் வைத்து
பறை சாற்றுவாயானால்
திருப்பி உனைத் தாக்கும்
இதுவே இறை நோக்கம்

துணவியூர் நடா.

## (F) Book

ஒன்றாச் சேராத
இரண்டு புத்தகம்
Book
வழித்தடம் பதித்தவர் வீணாய்
போனதில்லை
Facebook
நிறைவாய் இருக்கும் நிரந்தரமாய்
இருப்பதில்லை

அல்லையூர், உ.கனிஸ்ரன்.

## முகநூல் பிரியர்கள்

முகநூல் ரசிகர்கள்
இங்கு ஏராளம்
வயோதிபர் கூட
போட்டி போட்ட வண்ணம்
மூக்குக் கண்ணாடி
அணிந்தும் ரசிக்கிறார்கள்
ஆனால் ஒருவர் மட்டும்
நூல் படித்து
அறிவைத் தீட்டுகிறார்
இங்கே முகநூல் கண்களைக்
கெடுக்கின்றது
நூல் அறிவைத் தூண்டுகிறது

அபி-குலமாலிகா, சித்தன்கேணி.

## அன்னமும் எண்ணமும்

முந்தி வந்த செவியை
பிந்தி வந்த கொம்பு
மறைத்த செயல் போன்று
நிறைவைத் தந்த வாசிப்பு
முகநூலின் வருகையால்
குறைவது பெரும் குறையானது
பொன் போன்ற பொழுதுகள்
கண்முன்னே கரைகின்றது
அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும்
நஞ்சாவது நினைவில்
அலைமோதும்
அன்னப் பறவையின் தன்மை தான்
என்றும் நன்மைகளை வாரித்தரும்

க.நாகராசா, நுணாவில்.

## மௌனத்தின் தேடல்- 727



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## அ(மு)கம்

அகத்தை புதிதாக்குவதால் தான் அது
புத்தகமாம்...
முகத்தை புதிதாக்குவதால் தான் அது
முகப்புத்தகம் என்றார்களோ?
அகம் அழகாகினால் அழகில்லையாம்
முகம் அழகானால் தான் அழகாம்
அக அழகை விட முக அழகு ஆபத்து என்று
யாரோ சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன்
நிஜ உலகில் மட்டுமல்ல அது
டிஜிற்றல் உலகிலும்
உண்மையாகிப் போனது
உலகம் முக அழகை சார்ந்து
நிற்கிறது ஆதலால்
வரும் விளைவுகள் மிகவும் ஆபத்தானது

லாஞ்சனா பரமேஸ்வரன், கல்வியங்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை

கொமாண்டர் வன் ஹூன்ஸ் நாகபட்டினத்திற்கும், வைஸ்கொமாண்டர் ஜாக்கோப் வன்றீய் தன் படைவீரர்களுடன் பருத்தித்துறைக்கும் சென்றிருந்த ஒரு ஞாயிற்றுக் கிழமை கோட்டைக்குள்ளிருந்த ஒல்லாந்த தேவாலயத்தில் குரு பாஸ்தேயஸ்பாதிரியாரால் நடாத்தப்படும் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் நாள் சதி நிறைவேற்றத்தக்க தருணமாகக் கருதப்பட்டது.

தேவாலயத்தினுள் புகுந்து பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்போரைச் சடலங்களாக்குகின்ற முயற்சி தடுக்கப்பட்டது அனைவரும் கைது செய்யப்பட்டனர்

அவர்களுக்கு வழங்கிய தண்டனைகள் மிகமிகக் கொடூரமானவை.

சதித்திட்டத்தை உருவாக்க மூலகர்த்தாக்களாக விளங்கிய டொன்லுயிஸ், மன்னார் முதலி போர்த்துக்கேயர் ஒருவர் ஆகிய மூவருக்கும் கொடூரமான தண்டனை வழங்கப்பட்டது. அவர்கள் மூவரும் தண்டனை வழங்க பயன்படுத்தப்படும் சிலு வைச் சட்டத்தில் பிணைக்கப்பட்டனர்.

பின்னர் யாழ்ப்பாணக் கோட்டையில் தண்டனை வழங்கவென நியமிக்கப்பட்டிருந்த அலுகோசுகளினால் (காம்பிரிகள்) கோடரிகளினால் முதலில் தொண்டையிலும், பின்னர் மார்பிலும் வெட்டிப் பிளக்கப்பட்டு அவர்களின் இருதயங்கள் வெளியில் எடுக்கப்பட்டு அவர்களின் முகங்களில் வைக்கப்பட்டன.

பூதத்தம்பியின் தலை துண்டிக்கப்பட்டது ஏனையோர் பதினொருவர் தூக்கிலிடப்பட்டனர். அவர்களின் சடலங்கள் மரங்களில் தொங்கவிடப்பட்டு பறவைகளுக்கு இரையாக்கப்பட்டன.



21 செங்கை ஆழியான்

ஒல்லாந்தரின் தண்டனைகள் மிகக் கொடூரமானவை, மட்டக்களப்பில் அவர்கள் கைது செய்தவர்களைக் கழுவேற்றிக் கொன்றிருக்கின்றனர். மரக்குற்றியொன்றில் பொருத்தப்பட்ட கூரான அலவாங்கு போன்ற வேல்முனையில் பிருஷ்டத்திற்கூடாக தலை உச்சிவரை செலுத்திக் கொள்ளப்படுகின்றகொடூரம் கழுவேற்றலாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்ற எடுக்கப்பட்ட உட்புறச்சதி முறியடிக் கப்பட்டது, அதன் பின்னர் ஆங்கிலேயர் இலங்கைக்கு வரும்வரை யாழ்ப்பாணக் கோட்டை ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின் கீழ் விளங்கியது.ஒல்லாந்தரினால் அமைக்கப்பட்ட கோட்டை கட்டமைப்பில் மிக அற்புதமானதாகும்.

(தொடரும்....)

---

# கடல் புறா

## அன்பின் வழி




காலத்தின் பதிவு 118

சோழர்கள் விரோதியான ஸ்ரீ வியத்தின் படையில் சேர வேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டேன். நாட்டுப் பற்றுடைய அவன் அதற்கு ஒப்பமாட்டான் என்று நினைத்தேன். அதற்கு ஒப்பி என் உபதளபதியாகி இந்த ஊரின் பாதுகாப்பைத் தன் சொந்த வேலையாக்கிக் கொண்டான். இரண்டு முறைகளிலும் தோல்வியுற்றேன். அவன் போக்கு, யோசனை எதுவுமே எனக்குப் புரியவில்லை. அவனை நான் நேர்ப் போரினால் வெற்றி கொள்ள முடியாது? என்ற பலவர்மன் இடும்பனை உற்று நோக்கினான்.

இடும்பனும் தீவிர யோசனையில் ஆழ்ந்தான். பிறகு கேட்டான். சற்றுக் கவலையுடன், "வேறு என்ன வழி?" என்று.

பலவர்மன் முகத்தில் கவலை அலை பாய்ந்தது. "ஒரு வழி இருக்கிறது?" என்று மெள்ளக் கூறினான் அவன் குரலிலும் கவலை பாய.

"சொல்!" இடும்பனின் குரலில் ஆவல் மிகுந்து நின்றது.

"அது அன்பின் வழி" என்றான் பலவர்மன் குரலை நன்றாகத் தாழ்த்தி.

"என் தொழிலில் அந்தச் சொல்லுக்கே இடமில்லை."

"இடம் ஏற்படுத்திக் கொள்."

"ஏற்படுத்திக் கொண்டால்?"

"எதிரியை ஒரு வழியாக ஒழித்து விடலாம். அவனை மட்டுமல்ல, அவனுக்கு இப்பொழுது தாளம் போடும் இந்த நகர மக்களுக்கும், கடற்கரைக் கொள்ளையருக்கும் பெரும் படிப்பினையும் கற்பிக்கலாம்."

"வழியைச் சொல்."

"வழி என் மகள்?"

"யார் மஞ்சளழகியா?"

"ஆம்."

அவனை என்ன செய்ய வேண்டும்?"

"கடத்திச் செல்ல வேண்டும்."

இதைக் கேட்ட இடும்பன் பல விநாடிகள் பிரமை பிடித்து நின்றான். பிறகு காதில் விழுந்ததை நம்பாமலே கேட்டான். "உண்மையாகத்தான் சொல்கிறாயா பலவர்மா?" என்று.

"உண்மையாகத்தான் சொல்கிறேன். சந்தேகம் வேண்டாம்." பலவர்மனின் குரல் திடமாக இருந்தது.

"இந்த அக்ஷயமுனையையும் கடற்பகுதியில் ஸ்ரீ விஜயத்தையும் பலப்படுத்த நீ அவனைத் துணைத் தலைவனாக நியமித்துக் கொண்டதாக மக்கள் பேசிக் கொள்கிறார்களே." என்று கேட்டான் இடும்பன்.

"அப்படியும் அதற்கு வியாக்கியானம் செய்யலாம். பலவர்மன் குணத்தையும் மனத்தையும் அறியாதவர்கள் கொள்ளும் பொருள் அது" என்று பலவர்மன் சொன்ன பதிலில் பெரிதும் குரூரமும் வஞ்சகமும் கலந்து ஒலித்தது.

இடும்பன் மீண்டும் சற்று யோசித்தான். "மஞ்சளழகி உன் பெண்ணல்லவா பலவர்மா?" என்று கேட்டான் அவன்.

"இல்லை, வளர்ப்புப் பெண்."

"வளர்த்த பாசம் உன்னை விடுமா?"

"விடாது."

"அப்படியானால் அவள் நாசத்தை ஏன் விரும்புகிறாய்?"

"நாசத்தை விரும்பவில்லை. இடைக்காலத்தில் சில நாள் பிரிவுதான்."

"இருப்பினும் அவள் மனம் உடையுமே!" "உடையும்." "அது உனக்குத் திருப்தியா?"

"இல்லை. ஆனால் அதைவிட முக்கியம் ஸ்ரீ விஜயத்தின் சக்தி, அக்ஷயமுனைக் கோட்டையில் என் ஆதிக்கம், ஆகிய இரண்டும்."

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

410

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# சிறுநீரக மாற்று அறுவைசிக்சை....

சிறுநீரகம் முற்றாக செயலிழந்தவர்களுக்கு இன்னொருவருடைய சிறுநீரகத்தை அறுவைசிகிச்சை மூலம் பொருத்துவதே சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை ஆகும். இரண்டு வகையான சிறுநீரக அறுவைசிகிச்சைகள் உள்ளன. முதலாவது, உயிருடன் உள்ளவர்களிடமிருந்து, அவர்களின் சம்மதத்துடன் சிறுநீரகத்தைப் பெற்று, சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்கு பொருத்துவது.

இரண்டாவது, மூளை முற்றாக செயலிழந்த ஒருவரின் சிறுநீரகத்தை, அவரது குடும்பத்தினரின் சம்மதத்துடன் பெற்று சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்கு பொருத்துவது. எப்படியானவர்கள் இந்த சிறுநீரக தானம் பெறுவார்கள் என்று பார்த்தால், பொதுவாக சிறுநீரக பாதிப்பினால் இரத்தம் சுத்திகரிக்கப்படுபவர்கள் தான் சிறுநீரகத்தை தானமாக பெறுவார்கள்.


அதைவிட, சிறுநீரக தொழிற்பாடு 5சதவீத்திலும் குறைவாக உள்ளவர்களுக்கும் சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்படும். இது Preemptive kidney transplant என அழைக்கப்படும். அதாவது, Hemo dialysis எனப்படும் இரத்த சுத்திகரிப்பிற்கு உட்படுத்தப்பட முன்னரே, சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சையினை செய்வார்கள்.

எப்படியானவர்கள் சிறுநீரக தானம் செய்யலாம் என்று பார்த்தால், இலங்கையின் சட்ட விதிமுறைகளின் படி, சிறுநீரக தானம் செய்பவர், சிறுநீரக நோயாளியின் குடும்ப உறுப்பினராக இருப்பது தான் சிறந்தது. அல்லது நோயாளியின் நெருங்கிய நண்பராக இருக்கலாம். சிறுநீரகத்தை பணம் கொடுத்து பெறுவதென்பது இலங்கையில் சட்டவிரோதமானதாகும்.

சிறுநீரக தானம் செய்பவரின் வயது, ஆகக் குறைந்தது 30 ஆக இருக்க வேண்டும். ஆகக் கூடியது 55 தொடக்கம் 60 வயதாக இருக்கலாம்.

முக்கியமாக அவர் உடல் ஆரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும். அவருக்கு எந்தவிதமான சிறுநீரக பிரச்சினைகளோ அல்லது சிறுநீரகத்தைப் பாதிக்கக்கூடிய நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்களோ இருக்கக் கூடாது.

ஒருவர் சிறுநீரக தானம் செய்ய முன்வரும் போது, அவருக்கு சிறுநீரக பிரச்சினைகள் மற்றும் மேற்குறிப்பிட்ட நோய்கள் இருக்கிறதா என அறிய பல பரிசோதனைகளைச் செய்து, அவர் சிறுநீரக தானம் செய்ய உடல் ரீதியாக தகுதியானவர் என உறுதியாக அறிந்த பிறகு தான் அவரிடமிருந்து சிறுநீரகத்தை பெறக்கூடியதாக இருக்கும்.



சிறுநீரக தானம் செய்வதால், அந்த குறிப்பிட்ட நபருக்கு ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுமா என்று பார்த்தால், நிச்சயமாக எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. மிக மிக அரிதாக அவருக்கு குருதி அமுக்கம் ஏற்படலாம்.

சிறுநீரக தானம் செய்தவர் ஒவ்வொரு வருடமும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார். இதன்மூலம் அவருக்கு ஏதேனும் நோய்கள் ஏற்பட வாய்ப்பிருக்கும் பட்சத்தில் அதனை உடனடியாக கண்டறிந்து சிகிச்சைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

எல்லோரும் சிறுநீரகத்தை தானமாக கொடுத்து விட முடியாது. அதற்கு முதலில் அவரது குருதி பொருந்த வேண்டும். உதாரணமாக, சர்வ வழங்கி என கூறப்படும் O வகை இரத்தம் உடையவர்கள், யாருக்கும் சிறுநீரகத்தை தானமாக கொடுக்கலாம். அதே போல சர்வ வாங்கி என்று கூறப்படும் AB வகை குருதி உடையவர்களுக்கு யாரும் சிறுநீரகத்தை தானமாக கொடுக்கலாம். ஆனால், B வகை குருதி உடையவர்கள், B அல்லது O வகை குருதி உடையவர்களிடமிருந்து மட்டுமே சிறுநீரகத்தை தானமாக பெற முடியும்.

அதேபோல் A வகை குருதி உடையவர்கள், A அல்லது O வகை குருதி உடையவர்களிடமிருந்து மட்டுமே சிறுநீரகத்தை தானமாக பெற முடியும். அதன்பின், நோயாளி மற்றும் சிறுநீரக தானம் செய்பவரின் இரத்தத்தில் Gene பொருந்துகிறதா என்று பரிசோதித்து பார்த்த பின்னர் மட்டுமே ஒருவர் சிறுநீரகத்தை நோயாளிக்கு தானமாக கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

இதில் முக்கியமானதொரு விடயம் என்னவென்றால், உயிருடன் இருப்பவர்களிடமிருந்து சிறுநீரகத்தை தானமாக பெறுவதற்குரிய மருத்துவ செலவு மிகவும் அதிகமாகும். இதற்கு மாற்று வழியாக , மூளைச் சாவடைந்த ஒருவரின் சிறுநீரகத்தை தானமாக பெற்றுக்கொள்ளலாம்.

இதில் பொதுவாக எதிர்நோக்கும் பிரச்சினை என்னவென்றால், மூளைச் சாவடைந்த ஒருவரின் சிறுநீரகத்தை தானமாக பெற அவரது குடும்பத்தினரிடமிருந்து அனுமதியைப் பெறுவது எமது சமூகத்தில் மிகவும் கடினமான காரியமாகும். அண்மையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், மூளைச் சாவடைந்த ஒருவரிடமிருந்து, அவரது குடும்பத்தினரின் அனுமதியுடன் சிறுநீரகங்களைப் பெற்று, ஒரு பன்னிரண்டு வயது சிறுவனுக்கு பொருத்தி, முதன் முதலாக சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

மூளைச்சாவடைந்ததை உறுதிப்படுத்த, அனுபவம் மிக்க வைத்திய நிபுணர்கள் அந்த நபரை 24 மணி நேர இடைவெளியில் இரு தடவைகள் பரிசோதித்துப் பார்ப்பார்கள். அதில் ஒருவர் நரம்பு சம்பந்தமான வைத்திய நிபுணராக இருப்பார். இவர்கள் உறுதிப்படுத்தினால், அந்த நபர் 100 வீதம் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்பில்லை.

இந்நிலையில் அவரது குடும்பத்தினருக்கு அதனை தெரியப்படுத்துவதும், சிறுநீரகத்தை தானமாக கேட்பதும் உண்மையில் ஒரு கடினமான விடயமாகும். மூளைச் சாவடைந்ததை வைத்தியர்கள் உறுதிப்படுத்திய பின்னர், குடும்பத்தினரே முன்வந்து சிறுநீரகங்களை தானமாக கொடுப்பதன் மூலம் பல உயிர்களை காப்பாற்றக் கூடியதாக இருக்கும். கிட்டத்தட்ட 4 தொடக்கம் 20 வயதிற்கிடையில்,

1520 நோயாளிகள் இரத்தம் சுத்திகரித்தலிற்கு உட்படுத்தப்பட்டு வைத்தியசாலையில் இருக்கிறார்கள். உயிருள்ள ஒருவரிடமிருந்து சிறுநீரகத்தைப் பெறுவதற்கு அவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இவ்வாறானவர்களுக்கு சிறுநீரக தானம் கொடுத்து, அவர்களது உயிரைக் காப்பாற்றுவது சிறந்த செயலாகும்.

**Dr. வே. பவந்தன்**
**சிறுநீரக வைத்தியநிபுணர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரால்

# 12 பேர் கைது

(கொழும்பு)

ஜூலை 22 ஆம் திகதி தொடக்கம் இன்று வரையான 5 நாட்களின் காலப்பகுதியில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தின் விசேட புலனாய்வுப் பிரிவி னரால் 12 மோசடி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டார், நியூசிலாந்து, மலேசியா, ருமேனியா, கனடா ஆகிய நாடுகளில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தை ஏமாற்றிய 5 பெண் கள் உட்பட 12 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தின் செல்லுபடியாகும் அனு மதிப் பத்திரம் இன்றி நியூசிலாந் தில் வேலை வாய்ப்புக்கான நேர் முகப் பரீட்சைகளை நடத்திய குருநாகலில் உள்ள சட்டவிரோத முகவர் நிறு வனம் ஒன்றும் சோதனை யிடப் பட்டதுடன், அங்கு இருந்த 108 கோப்புகளும் அதி காரிகளால் மீட்கப்பட்டுள் ள துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டுள் ளனர். (6)

# 10 மில்லியனை கடந்த சுற்றுலா பயணிகளின் வருகை



(கொழும்பு)

இந்த ஆண்டின் தொடக்கத் தில் இருந்து கடந்த ஜூலை 15 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண் ணிக்கை பத்து மில்லியனை (1,095,675) தாண்டியுள்ள தாக சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் தரவு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, இந்த நிலைமை தொடர்ந்தும் பேணப்பட்டால், போருக்குப் பின்னர் இலங்கை யில் சுற்றுலாத்துறையின் உச்சநிலையை பதிவு செய்த 2018 ஆம் ஆண்டின் மட்டத்தை விஞ்சலாம் என அமைச்சு குறிப் பிட்டுள்ளது. (6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 | 150-200 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 260 | 250 | 220 | 280 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 560-600 | 500 |
| தக்காளி | 350 | 350 | 300 | 220 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 130-140 | 200 |
| கோவா | 350 | 300 | 400 | 300 | 400 |
| கரட் | 400 | 450 | 480 | 300 | 500 |
| பூசணி | 200 | 220 | 230 | 180 | 250 |
| புடோல் | 160 | 300 | 180 | 200 | 200 |
| வாழைக்காய் | 200 | 250 | 250 | 220 | 300 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 400 | 240 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 400 | 400 | 600 | 400 | 600 |
| வெண்டக்காய் | 200 | 220 | 200 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 200 | 150 | 150-250 | 200 |
| லீக்ஸ் | 450 | 500 | 550 | 300 | 600 |
| பீற்றூட் | 400 | 380 | 400 | 450 | 450 |
| கறிமிளகாய் | 800 | 900 | 850 | 400 | 1200 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 200 | 80-100 | 250 |
| போஞ்சி | 600 | 650 | 650 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 250 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 60 | 60 | 100 |
| தேசிக்காய் | 600 | 700 | 600 | 500-600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 90 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 650 | -- | 600 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 400 | -- | 500 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 60 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 70 | 60 | 100 | 80 |

## இன்று ஒரு தகவல் 196



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# பெண்களின் முதுமை

ஒரு கிராமத்திற்கு பேருந்து போய்க்கொண்டிருந்தது.கூட்டம் கொஞ்சம் அதிகம் தான். ஒரு பெண் கொஞ்சம் சிரமத்தோடு மேலே கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார். கண்டக்ரர் பார்த்தார். அந்த அம்மாவிற்கு யாராவது கொஞ்சம் இடம் கொடுங்கள் சார் உட்காரட்டும் என்றார். ஒருவர் எழுந்து இடம் கொடுத்தார். அந்த அம்மா உட்கார்ந்தார்கள். எல்லாம் சரி. இப்போது அவர்கள் முகம் எப்படி இருக்கும் என்று நினைக்கின்றீர்கள். கொஞ்சம் நன்றி உணர்வோடு அந்த கண்டக்ரரை பார்த்திருக்கும். எழுந்து இடம் கொடுப்பவரை பார்த்திருக்கும். இது தானே உங்கள் நினைப்பு. ஆனால் அப்படி இல்லை.

மிகவும் கோபமாக அந்த கண்டக்ரரை முறைத்துப் பார்த்து விட்டு அந்த இடத்திலே உட்கார்ந்தார்கள். கடைசி வரைக்கும் முகத்திலே தெரிந்த அந்த கடுகடுப்பு மாறவே இல்லை. எனக்கு இது ஆச்சரியமாக இருந்தது. என்ன விடயம் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று எனக்குள்ளே ஒரு ஆவல்.

ஒரு இடத்திலே பேருந்து நின்றது. அவர்கள் இறங்கினார்கள் நானும் இறங்கினேன். கொஞ்சம் தைரியத்தை வரைவழைத்துக் கொண்டு அருகில் போனேன். ஏங்க? அந்த கண்டக்கர் மிகவும் இரக்கப்பட்டு உங்களுக்கு ஒரு இடம் கொடுக்க சொன்னாரே அவர் மிகவும் நல்லவர் இல்லையா? என்று கேட்டேன். நல்லவர் தான் யார் இல்லை என்றார்கள். அப்படி என்றால் அவர் அப்படி சொன்னதும் நீங்கள் மிகவும் கோபமாக இருந்தீர்களே என்றேன்.

பின்னே என்னங்க? என்னைப் பார்த்து அம்மா என்கின்றாரே என்னைப் பார்த்தால் அவ்வளவு வயது ஆனவர் மாதிரியா தெரிகின்றது. அந்த அம்மாவிற்கு யாராவது இடம் கொடுங்கள் என்று தானே சொன்னார். அது தான் எனக்கு கோபம். இப்போது நீங்களே சொல்லுங்கள். எனக்கு என்ன வயது இருக்கும் என்றார்கள். நான் என்ன அந்த அளவு விவரம் இல்லாத ஆளா? மனதிலே என்ன தோன்றியதோ அதிலே ஒரு 20 வயதைக் குறைத்துச் சொன்னேன். என்ன ஒரு 20 அல்லது 21 இருக்கும் என்று சொன்னேன்.

நீங்கள் தான் ஜீனியஸ் என்று சொல்லி விட்டு மிகவும் சந்தோசமாக போய்விட்டார். இது எதற்கு சொல்ல வந்தேன் என்றால் முதுமையை நாம் யாரும் ஆசைப்பட்டு கூப்பிடு வதில்லை. ஆனால் அதுவாக ஆசைப்பட்டு நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கும். அது கூடப் பாருங்கள் விவரம் தெரியாமல் பெண்கள் என்றால் கொஞ்சம் விரைவாக வந்தது விடுகின்றது. இது ஒரு பொதுவான அபிப்பிராயம். விஞ்ஞான ரீதியாக இது உண்மையா?

இதைத் தெரிந்து கொள்வதற்காக அமெரிக்காவிலே யேல் பல்கலைக்கழகத்திலே ஒரு ஆராய்ச்சி நடந்திருக்கின்றது. அதிலே மிகவும் முக்கியமான தகவல் எல்லாம் கிடைத் திருக்கின்றது. மனித உடம்பிலே செல்கள் எல்லாம் தொடர்ச்சியாக இறந்து கொண்டே இருக்கும். இதை செல்களின் இனப்பெருக்கம் என்று சொல்வார்கள். ஒரு குறிப்பிட்ட வயது ஆகின்றபோது ஆண்களுக்கும் பெண்களுக்கும் புது செல் உண்டாகுவது குறைந்து விடும். அந்த சமயத்திலே தான் உடம்பிலே உள்ள தசைகள் சுருங்க ஆரம்பிக்கின்றது. அதனாலே தான் வயதான தோற்றம் உண்டாகின்றது.

இப்போது நடந்த ஆராய்ச்சிகளிலே என்ன தெரிகின்றது என்றால் இந்த செல்களின் இயக்கம் ஆண்களை விட பெண்களுக்கு விரைவாகவே குறைய ஆரம்பிக்கின்றது என்று தெரிய வந்திருக்கின்றது. குறிப்பாக எந்த வயதிலே இந்த இயக்கம் குறைய ஆரம்பிக் கின்றது? அதை துல்லியமாக சொல்ல முடியாது. இருந்தாலும் ஆண்களுக்கு 35 வயதிலே இது ஆரம்பிக்கும் என்றால் பெண்களுக்கு 30 வயதிலே இந்த இயக்கம் குறையலாம் என்று கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

அதனாலே தான் பாருங்கள் சில சமயம் கிட்டத்தட்ட ஒரே வயதிலே கல்யாணமான தம்பதிகளை கொஞ்ச நாள் கழித்துப் பார்த்தால் கணவனை விட மனைவிக்கு வயது அதிகமாக தோன்றும். பல பேர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள் குழந்தை பிறந்த தனாலே தான் பெண்களுக்கு முதிர்ச்சி அதிகமாகின்றது என்று. அது சரியில்லையாம். குழந்தை பேறுக்கும் முதிர்ச்சிக்கும் சம்பந்தமில்லை என்று சொல்கின்றது இந்த ஆராய்ச்சி.

அது இருக்கட்டும் பெண்கள் உடம்பிலே விரைவாக குறைகின்ற இந்த செல்களின் தன்மையை மேம்படுத்துவதற்கு ஏதாவது வழி உண்டா? புது ஹார்மோன் எதையாவது கண்டுபிடித்தால் தான் அது முடியும். ஜெனிடிக் கோடிங் என்கின்ற புதிய துறையிலே இது சம்பந்தமான ஆராய்ச்சிகள் எல்லாம் மும்மரமாக நடந்து கொண்டிருக்கின்றது. அதனாலே பெண்கள் அதிகமாக கவலைப்பட வேண்டாம்.

உங்களுக்கு மட்டுமா அந்தக் கவலை. அதனாலே ஆண்களும் மிகவும் அவஸ்தைப்பட வேண்டியிருக்கின்றது. எப்படி என்கின்றீர்களா? ஒரு பத்திரிகை நிருபர் ஒரு சினிமா நடிகையை பேட்டி காணச் சென்றார். அந்த அம்மா ஒரு 30 வருட காலமாக சினிமாவிலே நடிக்கின்றவர். கேட்கக்கூடாத ஒரு கேள்வியைக் கேட்டார். அதாவது உங்கள் வயது என்ன? என்றார்.அந்த அம்மா கொஞ்சம் கூட அலட்டிக்கொள்ளாமல் இந்த ஜீன் வந்தால் 20 முடிந்து 21 ஆரம்பம் என்றார்.

இந்த நிருபர் திடீர் என்று புத்தி கலங்கியது மாதிரி தன் கையாலே தன் தலையிலே ஓங்கி ஓங்கி குட்டிக்கொண்டார். அந்த அம்மா என்னங்க நான் ஏதாவது தவறாக சொல்லி விட்டேனா? என் பதில் சரி இல்லை என்று நினைக்கின்றீர்களா என்றார். அதற்கு இவர் உங்கள் பதில் சரி தான் என் கேள்வி தான் சரியில்லை. இந்த கேள்வியை 20 வருடத்திற்கு முன்னாலே உங்களிடம் கேட்டிருக்க வேண்டும். நான் தான் மிகவும் லேட் அது தான் குட்டிக்கிறேன் என்று மறுபடியும் குட்டிக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஸ்வர்ணபுரவர' விருது நிகழ்வில்

## வட மாகாணம் தேசிய ரீதியில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)


**நாடு முழுவதுமுள்ள 276 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கட்டம் கட்டமாக நடத்தப்பட்ட சபைகளின் செயலாக்க மதிப்பீட்டின் அடிப்படையில் 62 விருதுகளில் வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் 20 விருதுகளைப் பெற்று தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்றுள்ளது.**

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றங்களின் செயல் திறனை மதிப்பிடுவதற்கான ஸ்வர்ண புரவர தேசியவிருது வழங்கும் விழாவில் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவினால் குறித்த விருது வழங்கி வைக்கப்பட்டது.

நகரசபைகளுக்கு இடையில் இடம்பெற்ற செயலாக்க மதிப்பீட்டில், வல்வெட்டித்துறை நகர சபை ,1 ஆம் இடம் பெற்று தங்க விருதையும், வவுனியா நகர சபை 2 ஆம் இடம் பெற்று வெள்ளி விருதும், மன்னார் நகர சபை 7 ஆம் இடத்தையும்,

பிரதேச சபைகளுக் கிடையில் இடம்பெற்ற செயலாக்க மதிப்பீட்டில் வலி வடக்கு பிரதேச சபை 2 ஆம் இடம், வவுனியா தமிழ் பிரதேசசபை 3 ஆம் இடமும் பருத்தித்துறை 4 ஆம் இடம் மற்றும் மாநகர சபைகளுக்கு இடையில் இடம்பெற்ற செயலாக்க மதிப்பீட்டில் யாழ்.மாநகரசபை 8 ஆம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## இலங்கைக்கு கடத்த முயன்ற வலி நிவாரணி மாத்திரைகள் மீட்பு



(ராமநாதபுரம்)

ராமநாதபுரம் அடுத்த மானாங்குடி கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ரூ.1.80 கோடி மதிப்பிலான வலி நிவாரணி மாத்திரைகள் திருச்சி சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இதன்போது 10 பெட்டிகளில் பொதி செய்யப்பட்டிருந்த 570,000 மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய முதல் கட்ட விசாரணையில் கடத்தல் சம்பவத்தில் தொடர்புடையதாக கருதப்படும் சந்தேக நபர் ஒருவர் தலைமறைவாகியுள்ளதால் அவரை தீவிரமாக தேடி வரு வதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

கைப்பற்றப்பட்ட வலி நிவாரணி மாத்திரைகளின் மதிப்பு சுமார் ரூ.1.80 கோடி எனவும் சர்வதேச மதிப்பு மூன்று கோடி ரூபாய் இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-285)

## இலங்கை மீனவர்கள் ஏழுபேர் விடுதலை

(சென்னை)

எல்லைத் தாண்டி சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 7 இலங்கை மீனவர்களை இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

குறித்த 7 இலங்கை மீனவர்களும் கடந்த 18 ஆம் திகதி இந்திய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.மீனவர்களின் வழக்கு தொடர்ந்தும் நடைபெற்று வந்த நிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த 7 இலங்கை மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு மத்திய அரசு கோரியதன் அடிப்படையில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் ஏழு பேரும் சில தினங்களில் நாடு திரும்புவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## வெடுக்குநாறி ஆலய பூசகரிடம் ரி.ஐ.டி விசாரணை

(வவுனியா)

வவுனியா வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆயலத்தின் பூசகரை பயங் கரவாத புலனாய்வு பிரிவின் வவுனியா அலுவலகத்தினர் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவுக்கு வருமாறு கிராம சேவையாளர் ஊடாக விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் ஆலய பூசகர் பயங்கரவாத புலனாய்வு பிரிவின் வவுனியா அலுவல கத்திற்கு சென்று இருந்தார்.

அங்கு கடும் விசாரணைகள் இடம்பெற்றதோடு வெடுக்குநாறி ஆலயம் தொடர்பான பல்வேறு விடயங்களும் அவரிடம் வினாவப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூஜை வழிபாட்டின் போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடை யில் பெரும் சர்ச்சை ஏற்பட்ட நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்களில் ஆலய பூசகரும் உள்ளடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

## வாக்காளர் தொடர்பில் வெளியான வர்த்தமானி

(கொழும்பு)

சிறிலங்காவின் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கவுள்ளோருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி, தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாது போகுமென்ற அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்கள், பிறிதொரு வாக்கெடுப்பு நிலையம் ஒன்றில் வாக்களிப்பதற்கான வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை அனைத்து மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம், சரண மாவத்தை, இராஜகிரிய எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை விண்ணப்பதாரி தாம் வசிக்கின்ற பிரதேசத்தின் கிராம அலுவலர் மூலம் விண்ணப்பப்பத்திரத்தை சான்றுப்படுத்த வேண்டும் என்பதுடன், கிராம அலுவலரின் சான்றுப்படுத்தல் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)


# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1977 . 08 . 10



உதிர்வு 2024 . 07 . 24

அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றத்தின் ஆரம்பகால உறுப்பினரும் சிறந்த பட்டிமன்றப் பேச்சாளருமாகிய

**அமரர். சரவணமுத்து கருணாகரன்**

(ஆசிரியர்- யா/அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி)

அவர்களின் திடீர் மறைவுச் செய்தியறிந்து மிகுந்த துயர மடைகின்றோம்.அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-874)

அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுயமரியாதை மற்றும் முழு மனித குலத்தின் மீதான அன்பே நல்ல நடத்தையை உருவாக்கும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விக்கிரமபாகு கருணாரட்ணவை தமிழ் மக்கள் நினைவுகூர வேண்டும்

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண அவர்களின் மறைவு எம் தமிழ் இனத்துக்குப் பேரிழப்பாகும்.

தவிர, இலங்கைத் திருநாட்டில் பொருளாதாரப் பஞ்சம் மட்டுமல்ல. நேர்மையான – இன, மதவாதமற்ற – மனிதத்தை மதிக்க வல்ல தலைவர்களுக்கும் பெரும் பஞ்சம் என்பது இங்கு குறித்துரைக்கப்பட வேண்டியது.

இவ்விதம் நல்ல தலைவர்களுக்குப் பஞ்சமாக இருக்கின்ற நம் நாட்டில், கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண போன்ற நல்ல தலைவர்களின் மறைவு ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் இழப்பாகும்.

ஆம், இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று உரக்கக்கூறுகின்ற சிங்களப் பேரினவாதம், காடைத்தனத்தோடு வெறியாட்டம் ஆடியபோதெல்லாம் விக்கிரமபாகு கருணாரட்ண அதற்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

இந்த நாடு அனைத்து இனங்களுக்கும் சொந்தமானதென்பதை வலியுறுத்தினார்.

இதனால் சிங்களப் பேரினவாதம் அவரைக் கடுமையாக எதிர்த்தது.

இருந்தும் அவர் தனது கொள்கையில் – நிலைப்பாட்டில் இம்மியும் தளரவில்லை.

மாறாக தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கவல்ல ஒரு சிங்களத் தலைவராக அவர் விளங்கினார். சிங்களவராக இருந்து கொண்டு, தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்ததன் காரணமாக அவர் அனுபவித்த துன்பம் கொஞ்சமல்ல.

உண்மை. கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண ஒரு சிங்களப் பேரினவாதியாகத் தன்னை அடையாளப்படுத்தியிருப்பாராயின், அவர் இந்த நாட்டின் உயர் அமைச்சராக, ஏன்? பிரதமராகக்கூட இருந்திருக்க முடியும்.

ஆனால் அவர் அரசியல் பதவிக்காக தனது மனிதநேயத்தை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

அதேவேளை அன்று விக்கிரமபாகு கருணாரட்ண முன்வைத்த கருத்துக்களை இந்த நாடு கவனத்தில் கொண்டிருக்குமாயின், இன்று இலங்கை மிகச் சிறந்த நாடாக மிளிர்ந்திருக்கும்.

என்ன செய்வது அறிவிலிகள் மத்தியில் விக்கிரமபாகு கருணாரட்ண போன்ற அறிவார்ந்த தலைவர்களின் கருத்துக்கள் எதிர்வாதமாகவே பொருள் கொள்ளப்பட்டன.

அதன் விளைவை இன்று நாடு அனுபவிக்கிறது.

அதேசமயம் எம் தமிழ் இனத்துக்காகக் குரல் கொடுத்த விக்கிரமபாகு கருணாரட்ணவை எங்கள் பிரதிநிதியாக பாராளுமன்றத்துக்கு நாம் அனுப்பியிருக்க வேண்டும்.

அதை நாம் செய்யாமல் விட்டமை மிகப் பெருந்தவறு. எமக்குள் இருந்த பதவி ஆசை அதற்கான சந்தர்ப்பத்தைத் தடுத்திருந்தது.

ஆம், பல சந்தர்ப்பங்களில் விட்ட தவறுகளுக்கு கழுவாய் தேட முடியாமல் போகின்ற நிலைமை உண்டு.

அந்த வகையில் எமக்காகக் குரல் கொடுத்து சிங்கள மக்களிடம் வெறுப்பைச் சம்பாதித்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணவை நம் தமிழினம் என்றும் நினைவுகூர வேண்டும்.

அவரின் சமத்துவ சிந்தனை போற்றப்பட வேண்டும். அதுவே அவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

## பொலிஸ்மா அதிபர் விவகாரம் நீதிமன்றத் தீர்ப்பை மறுக்கும் அரசாங்கம்

### சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதி மேற்கொண்ட நியமனங்களை உயர்நீதிமன்றம் கேள்விக்கு உட்படுத்த முடியாது என அரசாங்கம் தெரிவிப்பதை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என இலங்கை சட்டத்தரணிகள்சங்கம்தெரிவித்துள்ளது.

அரசியலமைப்புப் பேரவையின் முடிவுகள் உயர்நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் அதிகாரவரம்பிற்குள் தெளிவாக இணங்குகின்றன எனத்தெரிவித்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்19வது திருத்தத்தின் பின்னர் ஜனாதிபதியின் அதிகாரங்கள் உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக் குட்பட்டது என்பது தெளிவான விடயம் எனவும் தெரிவித்துள்ளது.

மேற்படி அதிகாரத்தின் அடிப்படையில் தான் உயர்நீதிமன்றம் முன்னர் ஜனாதிபதி வழங்கிய பொதுமன்னிப்பை இரத்துச் செய்தது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை இரத்து செய்தது உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது பதவியிலிருந்த ஜனாதிபதிக்கு எதிராக தீர்ப்பு வழங்கியது எனவும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

### 90 சதவீத மருந்தை

## உள்நாட்டில் உற்பத்தி செய்ய நடவடிக்கை

நாட்டின் மொத்த மருந்துத் தேவையில் 90 சதவீதத்தை எதிர்வரும் ஆண்டிலிருந்து உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் பயன்படுத்தப்படும் 200இற்கும் மேற்பட்ட மருந்து வகைகள் தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த தொகை மொத்த மருந்துத் தேவையில் 25 சதவீதமாகும். இதற்கிடையில் மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.(ம)

## டெங்கு நோயாளர்கள் நாட்டில் அதிகரிப்பு

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 32,000இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாடளாவிய ரீதியில் 32,078 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 12 பேர் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்ததாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## மோ.சைக்கிள் மோதியதில் 63 வயதான நபர் மரணம்

(கொழும்பு)

மொரகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கணேவல்பொல - தாச்சிஹல்மில்லேவ பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் 63 வயதான நபர்ஒருவர் உயிரிழந்துள்ளதாக மொரகொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கணேவல்பொலவிலிருந்து கலென்பிந்துனுவெவ நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிள் செலுத்துனரும் பாதசாரியும் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பாதசாரி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி நீக்கம்

(கொழும்பு)

பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சிலர் வாகனமொன்றை சோதனை செய்யும் சந்தர்ப்பத்தில் வாகனத்தினுள் கஞ்சாவை வைத்து இளைஞர் குழுவொன்றிடம் சர்ச்சையில் ஈடுபட முயற்சித்த சம்பவம் தொடர்பிலான காணொளியொன்று சமூக வலைத்தளங்களில் பரவலாகிய நிலையில், சோதனை செய்த கொள்ளுப்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கஞ்சா பொதியை பொலிஸாருக்கு கையளிக்காத குற்றச்சாட்டின் பேரில் இந்த கான்ஸ்டபிள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சமூக வலைத்தளங்களில் இந்த கஞ்சா, பொலிஸார் மூலம் வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் உண்மைத்தன்மை எதுவாக இருப்பினும் வாகனத்தில் இருந்ததாகக் கூறப்படும் கஞ்சாவை பொலிஸில் கையளிக்கத் தவறியமை தொடர்பில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

### நாகர் கோவிலில்

## சடலமாக மீட்கப்பட்டவரின் உடற்கூற்று மாதிரிகள்

### பகுப்பாய்வுக்கு கொழும்புக்கு அனுப்பிவைப்பு

நாகர்கோவில் நாச்சிமார் கோவிலடி இராணுவ முகாமுக்குப் பின்புறம் இருந்து சடலமாக மீட்கப்பட்ட வயோதிபரின் இறப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த தங்கராஜா பெனாண்டு (வயது-78) என்பவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை(26) இரவு அப்பகுதியில் சடலம் காணப்படுவதாகப் பிரதேசவாசிகளினால் இராணுவ முகாமுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா இரவு சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் இறப்புக்கான காரணம் கண்டறியப்படாததை அடுத்து உடற்கூற்று மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்விற்காகக்கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

### இந்தியாவிலிருந்து வருகை தரும்

## சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்தியாவிலிருந்து 30,442 பேர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அத்துடன் சீனா, ஜேர்மன், நெதர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து இலங்கையை வந்தடையும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 11 இலட்சத்து 38 ஆயிரத்து 174 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க அமைச்சரவை அனுமதி

## வடமாகாண ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

**வட மாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**



வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக தெளிவூட்டும் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம் பெற்றது. இதன்போது இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் காணப்படுகின்ற வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கு வட மாகாண சபையில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு நியமிக்கும் அதிகாரத்தை அமைச்சரவை ஆளுநர்களுக்கு வழங்கியுள்ளது.

தற்போது தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளமையினால் அதற்கான விசேட அனுமதியினை தேர்தல் ஆணையகத்திடம் பெற்றுக்கொண்ட பின்னரே நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வேலையற்ற இளைஞர் யுவதிகளின் பாரிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரில் காங்கேசன்துறை, கிளிநொச்சி, மாங்குளம் ஆகிய மூன்று பகுதிகளில் விசேட பொருளாதார மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதனூடாக வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களுடனான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும் என தெரிவித்தார். (6)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் 78 ஆவது ஆண்டு நிறைவு விளையாட்டு விழா வானது இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 2.30 மணிக்கு நிலைய மைதானத்தில் குறித்த கழகத் தலைவர் அரசகேசரி ஆருஜன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (6)


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

1.முகாமையாளர் 3.அலுவலக உதவியாளர்
2.காசாளர் 4.பேருந்து நடத்துனர்

077 386 6250
077 573 1318

(1571)



# வேலைவாய்ப்பு

## இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

அரச காப்புறுதி நிறுவனமான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர்களுக்கான பதவி நிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றமையால் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமைகள்**

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ அரச ஊழியர்கள் / பகுதி நேர வேலை தேடுபவர்கள்/ஓய்வுக்காலத்தை பயனுள்ளதாக கழிக்க விரும்புபவர்கள்/ சாதிக்கத் துடிக்கும் பெண்கள் விரும்பத்தக்கது.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.

Whatsapp: 077 959 3223

(1572)



# விற்பனைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் 13 பரப்பும் 5 குழியும் உள்ள காணியும், யாழ்.மின்சார நிலைய வீதியில் பழைய தபால் கந்தோர் வீதியில் 4 பரப்பும் 7 குழியுள்ள காணித் துண்டும், யாழ்.பிறவுண் வீதியில் நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் பிறவுண் வீதி முகப்புடன் 3½ பரப்புக் காணியும் 7½ பரப்புக் காணித் துண்டும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 723 2535

(C-877)



# மணிவிழா வாழ்த்து

கலாநிதி திருமதி சந்திரிகா நாகேந்திரன்

(கல்வியியலாளர், கல்விமாணி இணைப்பாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)



ஆசிரிய மாணவருக்கு முன்னுதாரணமாய்
கற்பித்தல் நுட்பங்கள் பல கற்பித்து
ஆசிரிய மாணவரை ஆசிரியர்களாய்
செதுக்கி சிறந்த திட்டமிடல்
பாட முன் ஆயத்தத்தை செயற்படுத்த
வழிகாட்டிய தங்கள் வாழ்வு
மென்மேலும் சிறக்கவும்
திறம்பட மேலும் வழிகாட்டியாய்
பல பணிகள் செய்திடவும் வாழ்த்துகின்றோம்
என்றும் மாணவர்களாய்!

BEST WISHES

7ஆம் அணி
கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்கள்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

(1573)





PETFORM (PVT) LTD
Complete Packaging Solution

Petform (Pvt) Ltd is a leading PET manufacturing company in Sri Lanka, established in year 2004. Petform has a solid track record of catering to a variety of industries including pharmaceutical, cosmetics, bottled water, food and beverages, agrochemical and paper based products, from the humble beginning of our home plant in Malwana, Delgoda. We are looking for energetic and dedicated young people to fill the following vacancy in our team.

## SALES REPRESENTATIVES

**Required Qualifications**

- Minimum 2 years' experience in sales and marketing.
- Good communication skills
- Outgoing personality and a good team player
- Holding a valid riding license

FOR
JAFFNA BRANCH
Near Urumpirai

THE ABOVE POSTS WILL CARRY VERY ATTRACTIVE SALES INCENTIVES AND SALARY WITH OTHER BENEFITS MORE THAN 40,000/=

Please forward your resume with recent photograph and names of two non-related referees to careers@petform.lk mentioning the post applied for on the subject line to reach us within 10 days of this advertisement

Call for more information:
077 3506762/077350 6608

(C-878)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனம் விப...

கிளிநொச்சி ஏ9 வீதி 155 கட்டைப் பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சுமந்திரனின் சொகுசு வாகனம் எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. வாகனம் சிறிது சேதம் அடைந்துள்ளது. (ம-7)

## தேர்தல்...

பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பீ.லியனகே மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கே.டீ.ஜீ.எல்.ஏ தர்மசேன ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பொலிஸ் தலைமையகத்தில் தேர்தல் விவகாரங்களுக்காக விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த பிரிவுக்கு பொறுப்பதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தமிழரசு...

எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதில்லை என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி தீர்மானம் எடுத்துள்ளதாகச் சுமந்திரன் எம்.பி. கூறியிருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் சிறீதரன் எம்.பியைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

## ஜனாதிபதித்...

வெல்வோம் காலியில் நாம்" பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை ஏற்கெனவே செலுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, இளைஞர்களுக்கான சிறந்த இலங்கையை உருவாக்க அனைத்து அரசியல்வாதிகளும் அரசியல் பேதங்களை விடுத்து ஒன்றிணைய வேண்டுமெனவும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான தற்போதைய உடன்பாடுகளை முன்னோக்கி நகர்த்த வேண்டும் என்றும், அந்த வரைவுக்கு முரணாக செல்ல முடியுமென யாராவது கூறினால், அவர்கள் நாட்டை ஆபத்தில் தள்ளிவிடும் பொய்யைச் சொல்கிறார்கள் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ம-7)

## மகிந்தவைச்...

தில் சந்தித்த இருவரும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதற்கு பதிலளித்துள்ள மகிந்த திங்கட்கிழமை நடைபெறவுள்ள கட்சியின் நிறைவேற்றுக்குழுவின் கூட்டத்தில் இது குறித்துத் தீர்மானிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## தேர்தலில் ரணிலு...

னால் மோதல் தடுக்கப்பட்டுள்ளதாக அரசியல் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது தொடர்பாக இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

முறுகல்நிலை அடிதடி வரை சென்ற நிலையில் முன்னாள் முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ தலையிட்டு சண்டையைத் தடுத்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன ஜனாதிபதிக்கு, ஒரு கட்சியாக ஆதரவளிக்க வேண்டும் என லொஹான் ரத்வத்த இதன்போது வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இதன்போது கட்சி என்ற ரீதியில் என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியபோதே முறுகல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## இணக்கப்...

ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் உருவாக்கப்படவுள்ள புதிய கூட்டணி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நீண்ட நேரம் இருவரும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவளித்தால் உள்ளூராட்சி தேர்தலில் 30 வீதமும், மாகாண சபைத் தேர்தலில் 35 வீதமும், பாராளுமன்ற தேர்தலில் 40 வீதமும் போட்டியிடுவதற்கான ஒதுக்கீடுகளை செய்வதாக ரணில் விக்கிரமசிங்க இதன்போது கூறியுள்ளார்.

ஆனால், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 90 வீதமும், பாராளுமன்றத் தேர்தலில் 70 வீதமும், மாகாண சபை தேர்தலில் 70 வீதமும் பசில் ராஜபக்ஷ கோரியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதன்படி, இந்த கலந்துரையாடல் எவ்விதத் தீர்வும் இன்றி முடிவடைந்துள்ளதோடு, ஜனாதிபதி மற்றும் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான மற்றுமொரு முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலையில், நாளை திங்கட்கிழமை தமது ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பிலான அறிவிப்பை வெளியிட உள்ளதாகவும் பொதுஜன பெரமுன அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## விடுதலைப்...

இந்தப் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் தடை செய்யப்பட்ட அமைப்பாகக் கருதப்படும்.

தடைசெய்யப்பட்ட நபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் அதன் நிதி, பிற நிதி சொத்துக்கள் அல்லது ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் உள்ள பொருளாதார வளங்களை முடக்குவதற்கு இந்தத் தடை உட்பட்டது.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்கள் தடைசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கு நிதி மற்றும் பொருளாதார ஆதாரங்களை வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வாக...

வசிய வாகனங்களுக்கான தடை படிப்படியாக தளர்த்தப்பட்டது.

இதன்படி, அடுத்த சில மாதங்களில் முன்னுரிமைகளுக்கு ஏற்ப ஏனைய வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளும் நீக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# எத்தடை வரினும் யுக்திய தொடரும்

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிரான யுக்திய நடவடிக்கைகள் எத்தகைய தடைகள் வந்தாலும் தடுக்கப்படாது எனப் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளாரா? என வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் நீதி நடவடிக்கைகளின் கீழ் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் கடத்தல்காரர்களை காப்பாற்றவும் கைதுகளை தடுக்கவும் பலர் முயற்சித்ததாகவும் பொலிஸ் மா அதிபர் பதவியில் இல்லாவிட்டாலும் யுக்திய திட்டம் நிறுத்தப்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.07.27
சீட்டிழுப்பு இலக்கம் 5547
T 4 9 6 6 5 6
அத சம்பத T 6 6 5 6
சீட்டிழுப்பு இலக்கம் 122
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.07.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1577
Y 21 66 73 77 Y
Double Chance 19347

மெகா பவர்
திகதி 27/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1895
G 20 19 31 41 77
Double Chance 90322

லக்கி 7 VIP
திகதி 2024.07.27
சீட்டிழுப்பு இலக்கம் 0373
R 4 3 7 7 8 8 R

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3789
சீட்டிழுப்பு திகதி 27.07.2024
Y 42 60 66 67
Y 06281
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.27
சீட்டிழுப்பு இலக்கம் 0856
மேஷம் 12 25 31 61 மேஷம்
87641 02

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
27.07.2024 255 நீலம்
H 6 0 4 8 3 6
49477
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,438,500.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2521 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 27.07.2024 தினம் சனிக்கிழமை
16 17 38 49 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 101,200,426.40
DLB

சனிதா
திகதி 2024.07.27 வெற்றி வாரம் 4682
04 08 48 53 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,516,574.00
1 2 2 8 7
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4233 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.07.27 தினம் சனிக்கிழமை
28 35 37 42 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,867,730.40
872500
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 09 17 29 39 64
1697 சிவப்பு 27.07.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 535,554,705.80
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2347
சீட்டிழுப்பு திகதி : 2024.07.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,905,993.60
21 31 45 52 B
484959
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

**1%**

- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

(187)

தொடர்பு : **075 033 6759**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(1489)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

(182)

**074 17 37 684**

## மணமகள் தேவை

1985 சதயம், கும்பராசி 10 இல் செவ்வாய், கி.பா 25,
உயரம் - 168 Cm, அரச உத்தியோகத்தர்(கௌரவகுலம்)
தராதரம் - B.Sc, Audio Engineering
Dip.in.media studies
M.A (Philosophy)
M.A (Cultural Studies)
எதிர்பார்ப்பு - வீடு/காணி

(1557)

தொடர்பு: **021 222 8212**

## வீடு வாடகைக்கு தேவை

கச்சேரி, நல்லூர். திருநெல்வேலி யாழ் நகரை அண்மித்த பகுதிகளில் பொறியியலாளர் ஒருவருடைய குடும்பத்துக்கு குறைந்தது மூன்று அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு தேவை.

(199)

தொடர்புகளுக்கு:- **0771130302**

## Care Giver - பராமரிப்பாளர்

**கனடா, அமெரிக்கா, ஜேர்மனி**
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.

(C-0876)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 248/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 167/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 279/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 397/= | |
| 1 Kg சம்பா | - 280/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 680/= | |
| 400g நெஸ்டமோல்ட் | - 740/= | ~~780/=~~ |
| 750g சுபோஷ சத்துமா | - 560/= | ~~590/=~~ |
| 500 ml Vim Liquid | - 310/= | ~~375/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 145/= | ~~175/=~~ |
| 01 லக்ஸ் றோஸ் சவர்க்காரம் | - 150/= | ~~165/=~~ |
| 01 Fortune சோயா | - 100/= | ~~150/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3425/= | ~~3900/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 51/= | ~~80/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 310/= | ~~380/=~~ |

**Max 02**
400g Anchor
1025/=
~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(201)

Happy Supermarket
**0777 8080 30**

## உணவக வேலையாட்கள் தேவை

- சமையலாளர்
- உதவியாளர்
- உணவு பரிமாறுபவர்

(18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்)

(1548)

தொடர்புக்கு:

**076 134 1656**
**077 990 1340**
**021 221 7819**

**Harry Hotel**
**ஹரி ஹோட்டல்**

328, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்

மகாதேவா கட்டிட தொகுதி,
கோப்பாய்ச் சந்தி,
பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

(C-0876)

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0876)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு|
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241

## அடுத்த 10 வருடங்களுக்கு உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கும்?

### மாதாந்த அடிப்படையில் உங்கள் பிறப்பின் அடிப்படையிலான 10 வருட பலன்களை அறிந்து கொள்ளுங்கள் (120 மாதங்களுக்கான பலன்கள்)

உங்கள் பெயர், பிறந்த ஆண்டு, மாதம், திகதி, பிறந்த இடம் மற்றும் பிறந்த நேரத்தை பயன்படுத்தி ஜாதக முறைப்படி துல்லியமாக கணித்து தருகின்றோம்...

- திருமணம்
- தொழில்
- பண பலம்
- காதல்
- குடும்பம்
- பிரிவு
- கல்வி
- வியாபாரம்
- ஆரோக்கியம்
- எதிர்நோக்கும் பிரச்சினைகள்
- எதிர்காலம்

இச் சலுகை எதிர்வரும் ஆகஸ்ட் 15ஆம் திகதி வரை மட்டுமே

~~Rs.10,000~~
**Rs.4999**

LIMITED TIME OFFER
Special OFFER

UP TO 50% OFF

(193)

தொடர்புகளுக்கு **074 303 6275**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.